பிழை திருத்தும் மனப்பழக்கம்

தமிழண்ணல்

பிழை திருத்தும் மனப்பழக்கம்

சித்திரமும் கைப்பழக்கம்

செந்தமிழும் ‘மனப்பழக்கம்’

தமிழண்ணல்

விற்பனையுரிமை

மீனாட்சி புத்தக நிலையம்

48, தானப்ப முதலி தெரு, மதுரை-1

முதற்பதிப்பு : அக்டோபர், 2002
(துலை) ஐப்பசி, தி.வ.ஆண்டு 2033

பதிப்புரிமை : ஆசிரியர்க்கு

தமிழண்ணலின் பவளவிழா வெளியீடு

1. அடிக்கடி நேரும் பிழைகளும் திருத்தமும்
2. சொல் புதிது சுவை புதிது
3. பிழை திருத்தும் மனப்பழக்கம்

இந்நூல் வரிசை தொடர்கிறது

விலை : ரூ. 20.00

நூலைப்பற்றி

நூலின் பெயர்	: பிழை திருத்தும் மனப்பழக்கம்
ஆசிரியர் பெயர்	: தமிழண்ணல்
முதற்பதிப்பு	: அக்டோபர், 2002
தாளின் தன்மை	: வெள்ளைத்தாள்
நூலின் அளவு	: 18 x 12.5 செ.மீ
மொத்தப் பக்கங்கள்	: 80
நூலின் விலை	: ரூ. 20.00
அச்சிட்டோர்	: ஹேமமாலா சிண்டிகேட்
ஒளி அச்சுக்கோவை	: ஐ கேட்சர், மதுரை

வெளியீடு

உலகத் தமிழர் தேசியத் தமிழியக்கக் கல்விக் கழகம்

The World Tamils National Institute of Tamil Movement

தமிழைத்
தமிழக அரசுகள்
கைவிட்டன.

◆◆◆

இந்நிலையில்
தமிழமைப்புக்களே
வாரீர்!
தமிழாசிரியர்களே
வருக!
தமிழார்வலர்களே
புறப்படுக!

◆◆◆

மாணவர்களைப்
பயிற்றுவிப்போம்
மக்களைப் படிக்க
வைப்போம்

◆◆◆

ஒரு முறை படித்தால்
தமிழைப் பிழையின்றி
எழுத வேண்டும் என்ற
மனப் பழக்கம்
ஏற்பட்டுவிடும்.

தமிழியக்கக் கல்விக் கழகம்

இதற்குத் தமிழ்கூறும் நல் உலகனைத்திலும் - பள்ளிகள் கல்லூரிகள் தமிழமைப்புக்கள் தோறும் 'கல்விமையங்கள்' வேண்டும். மாணவரை, மகளிரை, மக்களைப் பயிற்றுவிக்கும் பயிற்சியாளர்கள் வேண்டும்; இயக்குநர்கள் வேண்டும். தொடர்பு கொள்க!

மாணவர்களுக்குப்
பாடமாக்குங்கள்!
போட்டி வைத்துப் பரிசு நல்குங்கள்!
இந்நூல் வரிசை தொடர்கிறது.

முதலில் பிழை இது.
சேவ்வீது இது
எனத்தெரிந்து
கொள்வது நல்லது.
அதன்படி எழுதுவது
அதனினும் நல்லது.
பிறரையும் இதன்
வழிப்படுத்துவது
மிகமிக நல்லது!

தமிழை
எப்படியும்
எழுதலாம்
எனும்
மனப்போக்கை
மாற்றுவோம்!

இப்படித்தான்
எழுதவேண்டும்
எனும்
ஒளிவிளக்கை
ஏற்றுவோம்!

தமிழ் வெல்லும்

இவை
எளிமையாய் எழுதப்பட்டுள்ளன,
இனிமையாய் எழுதப்பட்டுள்ளன,
எல்லோர்க்கும் பயன்படுமாறு
எழுதப்பட்டுள்ளன.

இவை
தமிழறிவை ஊட்டும்
தமிழுணர்வைப் புகட்டும்.
தமிழ் வெல்லும்!

தமிழண்ணல்
தமிழ்அடிசூடி
ஏரகம்
சதாசிவ நகர்
4/585 வண்டியூர்ச் சாலை
மதுரை 625 020.

பிழை தவிர்ப்போம், தமிழ் வளர்ப்போம்

1. அழைப்பிதழ்த் தமிழ்
2. வாசிப்பவர்
3. பவள விழா
4. மங்கலம்
5. தகிடுதத்தம்
6. அரசு
7. கள் விகுதி
8. அடிக்குறிப்புக்கள்
9. தறுவாய்
10. தருணம்
11. தவறுக்கு
12. பேருந்து
13. யாவரும் கேளிர்
14. அருட் பெருஞ் சோதி
15. பூசை
16. போக்கிலி
17. மெல்ல மெல்ல - மெள்ள மெள்ள
18. சியக்காய்
19. வெந்நீர்
20. இங்ஙனம்
21. அலக் கழித்தல்
22. அலைக் கழித்தல்
23. இரத்தம்
24. கண்ணராவி
25. நிரம்ப
26. எல்லை
27. கட்டடம்
28. தமிழ்நாடு அரசுந்து
29. இழிவு
30. இளிவு
31. உள்ளூற
32. கோவை, கோர்வை
33. நீர்த்துப் போதல்
34. நீற்றுப் போதல்
35. முந்நூறு
36. எத்தனை, எத்துணை
37. மூடை
38. கார்காலம்

பிழை தவிர்ப்போம், தமிழ் வளர்ப்போம்

39. ஆஞ்சநேயர்
40. குட்டம்
41. மிடைதல்
42. ஏற்கெனவே
43. பற்பொடி
44. பிணை, பிணையம்
45. சில்லரை
46. எண்ணெய்க்கடை
47. தலைக்கு ஒரு பங்கு
48. கயிறும் வயிறும்
49. முட மருத்துவசாலை
50. முப்பத்து இரண்டு
51. செயப்படுபொருள் - செயப்பாட்டு விளை
52. அறிக்கை, அறிவிக்கை
53. எனக்கு மகள், உனக்கு மகன்
54. ஆகிய
55. முதலிய
56. என்,என --
57. எண்ணிடைச் சொற்கள்
58. என்னும் என்ற என்கிற
59. என்று, என்ற
60. என்பது, என்பவர்
61. ஓர் ஒரு
62. அஃது, இஃது
63. ஆகும் ஆவர் ஆவார்
64. இராசராசன், இராசேந்திரன்
65. உலகம்
66. கடைப்பிடிக்க வேண்டும்
67. தொந்துரவு
68. கறையான்
69. மயிலம்மாள்
70. அவ்வையும் அய்யரும்
71. அம்மை, அம்மா, அம்மாள்
72. முன்னெழுத்து
73. உழுந்து
74. பொய்சொல்லான்

பிழை திருத்தும் மனப்பழக்கம்

1. அழைப்பிதழ்த் தமிழ்

தமிழில் அழைப்பிதழ்களை எத்தனையோ முறையில் எழுதுகிறோம். அப்போதெல்லாம் வரும் ஐயப்பாடு என்ன தெரியுமா?

அரங்கில் நிகழுமா? அரங்கின்கண் நிகழுமா?

2002ஆம் ஆண்டா? 2002ம் ஆண்டா?

2002-ல், 2002-இல் -எது சரி?

ஆறாம் மாநாடா? ஆறாவது மாநாடா?

அரங்கில் நிகழும் என்பது போதும். மாநாடு போன்றவையாயின் அணி செய்து அழகுபடுத்தப் பட்டதாயின், **'அரங்கின்கண்'** நிகழும் என்பதில் ஒரு பெருமிதம் உள்ளது.

ஆம், இல் என்பன ஒட்டுருபுகள். எழுத்தில் இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு என எழுதுக. எண்ணிலாயின் 2002ஆம் என எழுதுக. கோடு வேண்டியதில்லை. 2002இல் அல்லது 2002, அக்டோபரில் என எழுதுக. ஆறாம் ஆண்டுவிழா, எட்டாம் மாநாடு, பதினாறாம் ஆண்டு விளையாட்டுப் போட்டி என்பதே செவ்விய தமிழ். ஆறாவது ஆண்டு விழா, எட்டாவது மாநாடு, பதினாறாவது ஆண்டுப் போட்டி என்பன பேச்சு வழக்கு. செவ்விய தமிழே சிறந்தது.

2. வாசிப்பவர் வள்ளி

வானொலியில் 'செய்திகள் வாசிப்பது வள்ளி' என்று நாள்தோறும் ஒலிபரப்பி வந்தனர். இது தவறு எனக் கூறியபோது, மொழியியல் அறிஞர் சிலர் 'வாசிப்பது வள்ளி' என்பது முறையே எனச் சில காரணங்காட்டி விவாதித்தனர். ஆயினும் வானொலி நிலையத்தில் உயர்ந்த பதவிகளில் இருந்தவரான **விஜய திருவேங்கடம்** முயற்சியால் இப்போது **'வாசிப்பவர்'** என ஒலிபரப்புகின்றனர். 'வாசிப்பது செய்தி', அது வாசிக்கப்படுகிறது, அது 'வாசிப்பவர் வள்ளி' ஆதலே சிறப்பு. 'வாசிப்பது' தொழிற் பெயர். இது போன்றவற்றைக் காட்டிச் சிலர் விவாதித்தனர். எதற்கும் சுற்றிவளைத்துச் சமாதானம் தேடிவிடலாம். செயல் நிகழ்ச்சியைக் குறிப்பதால் ''வாசிப்பவர் வள்ளிநாயகம்'' என்றால்தான் பெருமிதமாக இருக்கும். சுற்றித் திரிவது மாடு. சுற்றித் திரிபவர் மனிதர். கொச்சை வழக்கில் வேண்டுமானால் 'எங்க பிள்ளை பேச்சைக் கேக்காது சுத்தித் திரியுது' என்று பேசலாம். வானொலி பல்லாயிரவர் கேட்கும், திருந்திய நடை பயில்வதற்குரிய இடம் என்பதை மறத்தலாகாது. இன்று இம்மாற்றம் வந்ததை எண்ணி மகிழலாம். பிழை எனத் தோன்றுவதற்கும் 'சமாதானம் தேடிவிடுவது சாமர்த்தியமே'. ஆனால் பலவற்றையும் ஒருசேரச் சிந்தித்து, தெளிவாகப் பேச, எழுத வேண்டும். பிழைதிருத்தும் மனப்பழக்கத்தின் தோற்றுவாய் என இதைக் குறிப்பிடலாம்.

3. பவள விழாவா? பவழ விழாவா?

'பிளாட்டினம் ஜுபிலியைப் 'Platinum Jubilee' பவள விழா எனல் பொருந்துமா? பிளாட்டினம் மிக உயர்ந்த தரப் பொன் அல்லது உலோகமாகும். தமிழில் பொன் விழா, மணி விழாக்களுக்குப் பிறகு 'பவள விழா' என்பது எழுபத்தைந்து வயது நிரம்பியதற்குக் கொண்டாடப்படுவது.

எண்பது நிரம்பியதை முத்து விழா என்று கொண்டாடுகின்றனர். முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் முத்து விழாக் கண்டவர் ஆவார். இங்ஙனம் தமிழ் மரபுடனும் இணைந்து இவ்விழாக்கள் வளர்ந்துள்ளன.

பவளம் என்பதே முன்பு பெருவழக்கு. அகநானூறு மூன்று பகுதியில் ஒன்று 'மணிமிடை பவளம்'. 'பவளச் செவ்வாய்ப் பைங்கிளி (நற்.317). பவளச் செப்பு (அகம்.25). பல இடங்களில் இவ்வாறு வரும் பவளம், சிறுபாணாற்றுப் படையில் 'பவழம்' என வருகிறது (164). கலித்தொகை (80), பரிபாடலில் (19) பவழம் வருகிறது. பொற்பவழம், பவழக்கொடி என ஆளப்படுகிறது. எனினும் 'பவள விழா' என்பதே தொன்மை வடிவம். அதைப் 'பவழம்' என மலையாளம் முதலிய மொழிகளும் ஆள்வதால், 'தப்பு' என்று அடித்துவிட வேண்டாம்.

4. மங்கலமா? மங்களமா?

மங்கலம் தமிழ்ச்சொல். கண்ணகியை 'மங்கல மடந்தை' என்பார் இளங்கோவடிகள். கண்ணகி மங்கலா

தேவியாக வழிபடப் பெறுவாள். மங்கலப் பொருள்களாகப்பூ, மஞ்சள், எலுமிச்சம்பழம், வெற்றிலை பாக்குப் போன்றவற்றைக் கருதுவது தமிழரின் நம்பிக்கை. நாகசுரம் மங்கல வாத்தியம். மங்கல நாண் தாலி எனப்படும்.

மங்களம் வேறு. அது தமிழன்று. சிலபோது தமிழின் திரிபாக வழங்கினும், நமது மங்காத மங்கலத்துக்கு அது ஒப்பாகாது. பெருமங்கலம், மண்ணுமங்கலம், வாள்மங்கலம் எனவரும் பாடாண் துறைகள் பல (தொல். 1037).மங்கலம், மங்களம் என்ற சொல்லாட்சிகள் ஒப்பிட்டுப் பார்த்தற்குரியன. பழைய நூல்களில் யாண்டும் மங்களம் காணப்படவில்லை; மங்கலமே காணப்படுகிறது. தொல்காப்பியம் 'மங்கல மொழி' (1190) பற்றிக் குறிப்பிடுகிறது. திருக்குறள் 'மங்கலம்' என்ப மனை மாட்சி'(60) என்று கூறும். புறநானூறு 'மங்கல மகளிர்' (332) எனக் குறிக்கிறது. சிலப்பதிகாரம் திருமண வாழ்த்தை 'மங்கல வாழ்த்துப் பாடல்' எனச் சுட்டுவதுடன் 'மங்கல நல் அமளி' (1-64) என்று மணப் படுக்கையைக் குறிப்பிடும். மேலும் கண்ணகியை 'மங்கல மடந்தை' (சிலம்பு 15-40. 131. 28-51) எனத் திரும்பத் திரும்பச் சுட்டும். அவளுக்கு எடுத்த கோயிலை 'மங்கல மடந்தை கோட்டம்' (30-53. 88) என்றே குறிப்பிடும். அதனால்தான் இன்றும் 'மங்கலாதேவி' கோயில் என்கின்றனர். 'மங்களூரில்'. 'மங்கலா தேவி கோயில் இன்றும் இருப்பதை, அவ்வூர்ப் பெயருடன் சார்த்தி நோக்க வாய்ப்புளது. இங்ஙனம் புனிதமான பலவற்றை 'மங்கலம்' என அடைகொடுத்துக் கூறலை மங்கல நெடுங்கொடி, மங்கல மறையோர்,

மங்கலத் திருநாள் போன்ற தொடர்களில் காணலாம். சிலப்பதிகாரம் 'மங்கல அணி' என மூன்று இடங்களில் சுட்டுவது 'தாலியையே' என ஆய்வாளர் குறித்துள்ளனர். புகார் நகரில் திருமண வேளையில் கண்ணகி திருமணத்தில் ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்ட 'மங்கல அணி'யும் (1-47), அவளுக்கு 'மங்கல அணி மட்டும் போதுமே, பிற அணிகளை அணிவதேன்' எனக் கோவலன் நாப்பிறழ்ந்து அமங்கலமாகப் பாராட்டுவதும் (2-63). பின்னர் அவன் ஒரேயடியாகப் பிரிந்த காலத்து அவள், அவன் சொன்னபடியே 'மங்கல அணி தவிரப் பிற அணி அணியாமல் போனதும்' (4-50) சிலம்பில் தொடர்புபட அழகாகக் கூறப்பட்டுள்ளன. இச்சொல் அன்றே நாட்டு வழக்கில் ஏறியிருந்தது என்பதைத் தொல்காப்பியம், புறநானூற்றில் இடம்பெறும் சூழல் நோக்கி உய்த்துணரலாம். கண்ணகி கணவனை இழந்தாலும் மங்கல மடந்தை (சுமங்கலி) என்றே போற்றப்படுவதை ஆழச் சிந்திக்க வேண்டும். கணவன் பெயரைக் காப்பாற்றத்தானே அவள் அந்தப் பதினான்கு நாள்கள் உயிர் வாழ்ந்தாள். அதனால்அவளை மங்கல மடந்தை ஆக்கி, அவள் கோட்டத்தை மங்கல மடந்தை கோட்டமாக்குவதில் அக்காலச்சமுதாயம் மிக ஆழமான பற்றுக்கொண்டிருந்தது. கண்ணகி பெயரையே கூற அஞ்சி, தயங்கி மங்கலமடந்தை, மங்கல தேவி என்றே வழங்கி வழங்கி, இன்று நாம் கண்ணகி கோட்டத்தை ஆராய்ந்து தேடுமளவு - இயற்பெயர் மறையுமளவு - ஆட்சிபெற்ற 'மங்கலத்தை' எண்ணிப் பாருங்கள்.

தமிழ் நாட்டில் பல ஊர்ப் பெயர்கள் மங்கலம் என்று முடிகின்றன. தமிழ் இலக்கணம் செத்தாரைத் துஞ்சினார் (உறங்கினார்) என்று கூறுவது போன்ற, மங்கல வழக்குகளை விளக்கும். தமிழ் அகப்பொருளில் மகளிர் செவ்வணி அணிதல், வெள்ளணி அணிதல் போன்ற இரண்டு உலக வழக்காறுகள் கூறப்படும். வெள்ளணி அணிதல் காதலர் கூடுதற்குரியதாய் 'மங்கல அணி' எனவும் படும். மங்கல வள்ளை என்ற ஓராடலும் மங்கல வள்ளை என்ற ஓரிலக்கிய வகையும் சுட்டப்படுகின்றன. இத்தமிழ் 'மங்கலம்' இந்திய மொழிகள் அனைத்திலும் ஏறியுளது.

வடமொழியிலும் 'மங்கலம்' என்ற சொல்லே காணப்படுகிறது. மங்களம் பாடுவது முடிவு பெற்றதற்கு அடையாளம். தமிழிலும் அச்சொல் மங்களம் என்ற பொருளில் ஆளப்படுவதுடன், ஒன்றைச் சுபமாக முடித்தல் என்பதுபோன்ற சற்று வேறுபட்ட பொருளையும் தருகிறது. இவை திரிபுகள்.

5. தகிடுதத்தம் பண்ணலாமா?

'தகிடுதத்தமா, தகிடுதித்தமா? இச்சொல் எப்படி வந்தது?' ஒருவர், 'இத்தைத் தூக்கி அத்திலே போட்டு, அத்தைத் தூக்கி இத்திலே போட்டு நம்மை ஏமாற்ற முயல்கிறபொழுது, 'என்ன தகிடுதத்தம் பண்ணப் பார்க்கிறாரு' என்று கேட்கிறோம். 'தகிடு' என்பதோடு ஒட்டிய சொற்கள் 'இந்துஸ்தானி' , உருது, பெர்சியன் மொழிகளில் காணப்பட்டுத் தமிழில் பேச்சுவழக்கில் புகுந்துளது. தகிலித்தல் - வஞ்சித்தல், தெலுங்கில் 'தகிலிஞ்சு' என்பர். தகிலன் - வஞ்சகன் என்கிறது.

யாழ்ப் பாணம் தமிழகராதி. தகிடி - ஏமாற்றுகை. ஒன்றைக் குழப்பி ஏமாற்றுவதால் 'தகிடுதத்தம்' ஏமாற்றும் பண்பை, இயல்பைச் சுட்டுகிறது. தகிடு+தத்தம். தகிடு என்பதில் உள்ள 'இ' காரணமாக தத்தம் என்ற பின்னொட்டு சிலபோது தித்தமாக ஒலிக்கப்படுகிறது. நாட்டியத்தில் சுழன்றாடும் சந்தமும் தகிடுதகிடுதத்தம் என ஒலிப்பதுண்டு, நாட்டில் இன்று என்றுமில்லாத அளவு தகிடுதத்தம் பெருகிவிட்டது என்றால் மறுக்கமாட்டீர்கள்!

6. அரசு

அரசு, அரசாங்க வேறுபாடு என்ன? இரண்டும் ஒன்றே. அரசு + அங்கம் = அரசாங்கம். தமிழும் வடமொழியும் இணைந்த சொல். அங்கம் - உறுப்பு, நிறுவனம். மதுரைநகர், பனைமரம் என்பனபோல் இது இருபெயரொட்டு. அரசாகிய அங்கம். இதை அரசு என்றே குறிப்பிட்டாலும் போதும். இன்று அரசு அறிக்கை வெளியிட்டுள்ளது. இது அரசுக்குறிப்பு. அரசாணை வெளிவந்துள்ளது. 'அரசு' போதுமென ஆகிவிட்டது.

7. கள் விகுதி அளவிற்கு மேல் தேவையா?

உடையனவாக, உடையவையாக, உடையவைகளாக என்பனவற்றில், கடைசியில் உள்ளதில் 'கள்' தேவையின்றி வந்துளது. முன்னயவை இரண்டுமே போதுமன்றோ?

மாடு வந்தது, மாடு வந்தன என்றாலே வினைச் சொல் அடிப்படையில், ஒருமை பன்மை முன்பு உணரப்பட்டது.

இன்று மாடுகள் என்னும்போது, எளிமையும் தெளிவுமிருப்பதை மறுக்க முடியாது. அவர்களில் உள்ள 'கள்' மரியாதையைச் சுட்டத் தேவைப்படுகிறது. இந்தப் பழக்கத்தில் 'உடையவைகளாக' என்று பன்மைக்கு மேல் பன்மை வந்துவிடுகிறது. எளிமை நோக்கிய நடைகளில் இவை வந்துவிடுகின்றன.

கள் விகுதி தொல்காப்பியர் காலத்தில் பேச்சில் அருகிக் காணப்பட்டிருக்கவேண்டும். அவர் குறிப்பிடும் 'மக்கள்' என்பதில் *(1000)*கள் ஒட்டிக்கொண்டிருக்கிறது. திருவள்ளுவர் 'கீழ்களது' *(1075)* என இழிவாகக் கூறுமிடத்தில் 'கள்' ஒட்டைச் சேர்த்துள்ளார். மதுவிலக்கைக் கடுமையாக அமலப்படுத்தினாலும் அது வெள்ளம்போல் பெருக்கெடுக்கிறது. அதுபோலவே 'கள்'ளும் நம்மையறியாமலே பேச்சிலும் எழுத்திலும் பெருகிவிட்டது. எனினும் அளவோடு பயன்படுத்தலாம். அடிகள் - சுவாமிகள் அவர்கள் வந்தார்கள்-இத்தனை 'கள்' வேண்டுமா?

8. அடிக்குறிப்புகள், அடிக்குறிப்புக்கள்

என்னுடைய நூல் ஒன்றில் இவ்வாறு இருவிதமாகவும் வருவதைச் சுட்டிக் காட்டி வேலூர் ஆறுமுகம் தினமணியில் வினாத் தொடுத்திருந்தார்.

கள் விகுதி சேரும்போது ஒற்றுமிகாத இடங்கள் மிகப் பலவாகும். பன்றிகள், பறவைகள், அலைகள் எனச் சொல்லிப் பாருங்கள்! தரவுகள், விளைவுகள் என முற்றியலுகரத்தின் பின் வரும்போது மிகுவதில்லை. ஆடுகள், காசுகள் என நெடில் தொடர்க் குற்றுகரத்தின்

பின்னும் படகு, கயிறு (உயிர்த் தொடர்). சார்பு (இடைத் தொடர்). பண்பு (மென் தொடர்) போன்ற பிற குற்றுகரங்களின் பின்னும் 'கள்' ஒட்டாது. பசுக்கள், உடுக்கள் எனக் குறிலிணைக்குப் பின்னும் ஆக்கள், மாக்கள், பாக்கள் என நெடிலுக்குப் பின்னும் மிகுந்தே வரும்.

வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வல்லெழுத்து வருமொழி முதலில் வந்தால் ஒற்று மிகுதல் பொது விதி. பாக்குப் பொட்டணம். காட்டுச் செடி, மூச்சுத் திணறல் என ஒற்றுமிகும் பழக்கத்தினால், எதிரே 'கள்' விகுதி வரும் போதும் மிகுகின்றது. பாட்டுக்கள், பேச்சுக்கள் , பற்றுக்கள் என வரினும் பாட்டுகள், பேச்சுகள், பற்றுகள் எனவும் கூறுகிறோம். வன்தொடர்க் குற்றுகரச் சொற்களில் மட்டும் உறழ்ந்து வருகிறது. குறிப்புகள், குறிப்புக்கள் எனவும் ஆவது, இந்த உறழ்ச்சியால்தான். வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின்னர், பெரிதும் ஒற்று மிகுந்து வருவதே மரபு என அறிஞர்கள் கூறியுள்ளனர். குறிப்புக்கள், பாட்டுக்கள், எழுத்துக்கள், பற்றுக்கள் என்பதையே மரபுவழியினர் ஒப்புவர். இவை இடம் நோக்கி ஆளப்படுவன. ஓசை இனிமை பொருளுணர்ச்சி இரண்டும் - சற்றுச் சொல்லிச்சொல்லிப் பார்த்தாலே எது நல்லது என்பது விளங்கி விடும்.

9 . தறுவாய்

தறுவாயில் என்பதும் முன்பு அதிகம் புழங்காமல், இன்று பெருவழக்காகக் காணப்படும் சொல்லாகும். 'அவர் புறப்படும் தறுவாயில் போய்ப்

பார்த்தேன்' என்றால், அக்கால எல்லையில் என்று பொருள்.

'வாய்' - இடம், காலம் இரண்டையும் குறிக்கும். மடுத்த வாய் - தடைப்பட்ட இடம் (குறள் 624). ஒல்லும் வாய் - இயலுமிடத்தெல்லாம், இயலும் போதெல்லாம் (குறள் 673). செல்லும் வாய் - செல்லுமிடம்.

சாகுந்தறுவாயில் கிடப்பவருக்கு உதவுவது பெரும் புண்ணியம். படம் முடியும் தறுவாயில் புறப்பட வேண்டும். இவற்றில் அந்தக் கால எல்லை பற்றிய குறிப்பு அழுத்தமாக உளது. கன்னடத்திலும் 'தறுவாய்' வழங்குகிறது. தமிழ்ப் பேரகராதி 'தருவாய்' எனவும் போட்டு பெருங்கதையை மேற்கோள் காட்டுவது பொருந்தவில்லை. ''அத் தறுவாயில் ஆருயிர் வழங்கிய'' (பெருங். வத்தவ 9-55) எனப் பெருங்கதையில், உ.வே.சா. பதிப்பில் காணப்படுகிறது. தறுவாய் - சமயம் என்று அவர் குறிப்புரையும் எழுதியுள்ளார். தருவாய் - கொடுப்பாய் எனவும் பொருள்படுதலால், 'தறுவாய்' என வேறுபட அமைதலே பொருத்தமாகும். தறுவாய் - கால எல்லை. குழந்தைகள் தமிழைக் கற்காமல் புறக்கணிக்கும் இத்தறுவாயில், இவ்வாறு நாம்தான் முயன்று சொல்லித்தர வேண்டும். (இங்கெல்லாம் 'தருவாய்' எனப் போடுவது பெரும் பிழை).

10 . தருணமும் தறுவாயும்

தருணம்: தக்கசமயம், பருவம். தருணம், தக்கசமயம் பார்த்து உதவுவது; தறுவாய் உற்ற நேரத்தில் உதவுவது; தருணம் - தக்க பருவத்தில் நடப்பது; தறுவாய் ஒன்று நடந்த கால எல்லையில் நிகழ்வது. தக்க நேரம்

என்பது பக்குவப்பட்ட நிலை; உற்ற நேரம் என்பது நடந்த கால எல்லை. ''அவர் கடையைவிட்டுப் புறப்படும் தறுவாயில் சென்று கண்டேன். என் நிலைமையை விளங்கிக் கொண்டு தக்க தருணத்தில் உதவினார்'' என்னும்போது, பொருள் சற்றுக் கிளை பிரிவதை உய்த்துணரலாம். தருணத்தில் என்பதை விடவும் தக்கசமயத்தில், தக்கசெவ்வியில் உதவி கிடைத்தது என்றால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

11. தவற்றுக்கு வருந்துவதா? தவறுக்கு வருந்துவதா?

டு, று க் குற்றியலுகரங்கள் வந்து, தொடராகும் போது அவற்றிலுள்ள மெய்யெழுத்துக்கள் இரட்டிப்பது ஒரு தமிழ் வழக்காறு. நாறு + கால்= நாற்றுக்கால், நாற்றங்கால். ஆறு + பாசனம் = ஆற்றுப்பாசனம். ஆடு + குட்டி = ஆட்டுக் குட்டி. தேடு + அம் = தேட்டம். அதாவது தேடப்படும் செல்வம்.

வயிறு + பசி = வயிற்றுப் பசியாகுமே தவிர வயிறுப் பசி ஆகாது. சோறு + பானை சோற்றுப் பானையானால் நல்லது; சோறுப்பானை யென்றால் பொருள்தராது. பள்ளிக்கூடங்களில் 'நாட்டுத் தொண்டுத் திட்டம்' உள்ளது. அதை 'நாடு தொண்டுத் திட்டம்' என்று கூறுவதில்லை.

''சிக்கனம் வீட்டைக் காக்கும், சேமிப்பு நாட்டைக் காக்கும்'' என்றுதானே அரசு விளம்பரம் செய்கிறார்கள். வீடைக் காக்கும், நாடைக் காக்கும் என்பதில்லையே? வீடு + ஐ = வீடை ஆகாமல் வீட்டை

ஆவதைக் கவனியுங்கள். அதைப்போல் தவறு + ஐ = தவறை ஆகாமல் தவற்றை என்றுதான் வர வேண்டும்.

ஆனால் தவற்றைச் செய்யாதே. தவற்றுக்கு வருந்துகிறோம் என்று எழுதாமல் தவறைச் செய்யாதே, தவறுக்கு வருந்துகிறோம் என்றுதான் எழுதுகிறார்கள்.

தமிழில் 'உறழ்ச்சி' என ஓர் இலக்கணம் இருக்கிறது. பெரும்பான்மையான விதிக்கு மாறாகச் சில இடங்களில் மாறியும் வரும். அங்ஙனம் சிறிய அளவில் மட்டும் மாறி வருவதைப் 'புறனடை' என்பர். சில சொற்கள் இரண்டு விதமாக எழுதப்பட்டு, இரண்டும் தவறல்ல என ஏற்கப்பட்டால் அதற்கு உறழ்ச்சி என்று பெயர். அப்படியும் வரலாம். அல்லாவிட்டால் இப்படியும் வரலாம் என ஏற்பது அது. நாடு கிழவோன், காடு கிழாள் என்று முற்காலத்திலேயே வழங்கியுள்ளது. விதிப்படி இவை நாட்டுக் கிழவோன், காட்டுக் கிழாள் என்று வரவேண்டும். நாட்டிற்கு உரிமையுடைய தலைமகனை நாடு கிழவோன் என்கிறோம். வீடு + தோட்டம் = வீட்டுத் தோட்டம் ஆதல்போல் நாடு + கிழவோன் நாட்டுக் கிழவோன் ஆகவேண்டுமல்லவா? ஆயினும் உச்சரிப்பதற்கு இனிமையில்லாததால் 'நாடு கிழவோன்' என்றே ஆளலாயினர். இங்ஙனம் ஒரு சொல்லிற்கு மட்டும் மாறிவருவதால், இதைப் 'புறனடை' என்போம். இதனையே இரண்டு விதமாகவும் வரலாம் என ஏற்கும் போது 'உறழ்ச்சி' ஆகிறது.

'தவறுக்கு' என எழுதுவதைப் புறனடை என ஏற்கலாம். அதற்காக ஒருவர் 'தவற்றுக்கு' என

எழுதியிருந்தால் அதைத் தவறு எனலாமா? கூடாது. எனவே 'உறழ்ச்சி' விதிப்படி சில இடங்களில் இரண்டு விதமாகவும் வரலாம் எனக் கொள்ளவேண்டும். அதற்காக எல்லா இடத்திலும் புறனடை வரலாம், உறழ்ச்சி வரலாம் என்று நம் விருப்பம்போல் மாற்றிக் கொண்டிருக்கக்கூடாது. பொருள் சிதையாமல் இருக்குமிடங்களிலும் ஒலி இனிமை தருமிடங்களிலும் மட்டுமே இவை ஏற்கப்படும்.

12. பேருந்து

சிற்றூர்கள் சிலவற்றில் 'பேரூந்து நிலையம்' என எழுதி வைத்துள்ளனர். **பேருந்து** நிலையம் - என்பதே சரியான வடிவம். சில வண்டிகள் ஊர்ந்து போவதாக எண்ணி, அவ்வாறு 'பேரூந்து' என்று போட்டுவிட்டனர் போலும்.

'உந்து' சக்தி (Motion). அவ் ஆற்றலையுடையது உந்து (Motor). அதில் பெரியது **பேருந்து**; சிறியது **சிற்றுந்து**; சிறியதில் இனியது **மகிழ்வுந்து**; ஆட்டோ என்பது தானியங்கி எனப் பொருள்படும். முன்பு 'ரிக்ஷா' என்பது, மனிதன் ஓட்டியது. இது 'ஆட்டோ ரிக்ஷா' - 'தானியங்கி'. இதை இன்று '**தானி**' எனச் சுருக்கமாக அழைப்பர்.

பேருந்து நிலையம் என்றே சொல்லுவோம்; எழுதுவோம். **சிற்றுந்து**களிலும் பயணம் செய்வோம்; விரைவாக வேண்டின் **தானி**யைக் கூப்பிடுவோம். வாய்ப்பு இருப்பின் **மகிழ்வுந்து** வாங்குவோம்.

கட்டளைத் தமிழில் கட்டாயம் இவற்றைப் பின்பற்றுவோம். கட்டளைத் தமிழ் மொழியை வாழவைக்கும்.

13. யாதும் ஊரே; யாவரும் கேளிர்

கணியன் பூங்குன்றன் பாட்டின் முதல் அடி இது, இன்று உலகப் புகழ் பெற்றுவிட்டது. ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில், சிலர் 'யாவரும் கேளீர்' என எழுதி வைத்துவிட்டனர்.

கேளிர் என்பதே முறையான சொல். கேள்-உறவு. கேண்மை இதன் பண்புப் பெயர். கேளிர் - உறவு, நட்பு, உடன்பிறப்பு அனைத்தையும் குறிக்கும். மனித இனமனைத்தும் ஓரினமே. சாதி, சமய, மொழி, இன, நாடு வேறுபாடு எல்லாம் புறத்தோற்றம். இவற்றைக் கடந்து மனிதகுலம் ஒன்றே என்பது இது.

கேளீர் - என எழுதியது 'கேளிர்' என்பதன் பொருள் தெரியாததால்தான். அவரும் நம் கேளிரே.

கேளிர் - உறவுடைய அனைவரையும் குறிக்கும் தூய, இனிய, நல்ல தமிழ்ச் சொல். தமிழ் மொழியின் கேளிராகிய நாம் கேளிர் என்பதன் சிறப்பை அறிந்து, அனைவரும் ஒருவருக்கொருவர் கேளிராக வாழ்வோம்.

14. அருட்பெருஞ்சோதி

'ஞ்' எனும் ஞகர ஒற்றுக்குப் பிறகு 'ச' கர ஒலி, இயல்பாகவே 'ஜ' போல ஒலிக்கும். பசலை, பச்சை, பஞ்சு. ச,ச்,சு - மூன்றுக்கும் ஒலிப்பில் உள்ள

வேறுபாட்டைச் சொல்லிப் பாருங்கள். இந்த ஒலி மாற்றம், கூடவரும் எழுத்துக்களால் ஆவது. ஒலி மாறுவதால் பொருள் மாறாது.

அஞ்சு, மிஞ்சு, கெஞ்சு, மஞ்சள் நிறம் - 'ஜ' ஒலி இயல்பாக ஒலிக்கிறது. ஆஞ்சநேயர் என்றால் போதும்; 'ஆஞ்ஜ' எனல் வேண்டாம். இளஞ் ஜோடிகள் - ஒரு திரைப்படப் பெயர். இது பெருந்தப்பு. 'இளஞ்சோடிகள்' என்றால்போதும். சோடி என்பதே தமிழ்தான். சோடு, சுவடு, சோடி. 'சோட்டால் அடிப்பேன்' என்று கேள்விப்பட்டதில்லையா? இரண்டும் ஒரே மாதிரி, இரட்டையாய் இருப்பன எல்லாம் சோடுகள், சுவடுகள், சோடிகள்.

'அருட்பெருஞ்சோதி' என்பதே முறையானது. 'சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே' என்பது திருவாசகம். வள்ளலாரும் அவர் காலச் சூழலில் 'அருட்பெருஞ்ஜோதி' என ஆண்டிருப்பினும், அகவலுக்குள் அருட்பெருஞ் சோதி என்றும் எழுதியிருப்பதை, தவத்திரு ஊரனடிகள் மூலம் தெரிந்து கொள்ள முடிந்தது. ஏடுகளைப் பார்த்துத் திருவருட்பாவைப் பதிப்பித்தவர் அவர். இன்று நாம் 'அருட் பெருஞ் சோதி' என எழுதுவதே முறையும் நெறியுமாகும்.

15. பூசை

பூஜா வேறு; பூசை வேறு. உருவ வழிபாடு - சிலை வழிபாடு தமிழருடையது. ஆரியர்கள் அக்கினியை வழிபட்டனர். அவர்களுக்குச் சிலை வழிபாடோ, திருக்கோயில் வழிபாடோ கிடையாது.

'வாய் பூசி வந்தேன்' என்பது மங்கலவழக்கு, இலக்கண எடுத்துக்காட்டு. பூசுதல் - சுத்தம் செய்தல், தூய்மைப்படுத்துதல், சிலைகளுக்கு எண்ணெய்க் காப்பிட்டு, நீரூற்றி நாள்தோறும் 'கற்சிலை' முதல் கருவறை வரை சுத்தம் செய்வதும், அழகுபடுத்துவதுமே பூசனை. பூசகர், பூசாரி - அவர் செய்வது பூசை; பூசனை என்பதும் உண்டு. பூசிப்புணர்த்துதல் - சந்தனம் பூசி அலங்கரித்தல். பூசித்தல் பூஜா ஆகாது.

பூசாவாயர் - தூய்மை செய்யாத வாயினர் (அகம்.265). சங்கப்பாடல்களில் பூசுதல் - தேய்த்துக் கழுவிச் சுத்தம் செய்தல் எனும் பொருளிலும் சந்தனம் முதலான மணப் பொருள்களைத் திருமேனியில் தடவி அலங்கரித்தல் எனும் பொருளிலும் பல இடங்களில் வருகிறது.

திருக்கோயில்களுக்குள் வேதாந்திகள் நுழைய வெறுத்த காலமுண்டு. அவர்கள் சிவ வழிபாடோ, சிவ தீக்கையோ பெற்றவர் அல்லர்.

அவர்களுடைய வடமொழிக்கு அங்கு இம்மியளவும் இடம் கிடையாது.

பூசனை - சுத்தம் செய்தலும் அலங்கரித்தலுமே. கண்ணகிக்குச்சிலையெடுத்த காலந்தொட்டு இப்பழக்கம் உண்டு. பிற அபிடேகங்கள் யாவும் முன்பு குறிக்கப்பட வில்லை. பூசகமாம் தமிழர் வழிபாட்டுக்குத் தமிழகத் திருக்கோயில்கள் மாற வேண்டும். தமிழ் வழிபாடே அங்கு முழங்க வேண்டும். சமற்கிருதத்தில் இதற்கு வேர்ச்சொல் இல்லை. குண்டர்ட்டும் கிட்டல்லும் 'பூசு' என்பதிலிருந்து வந்ததே பூசை எனக் கூறியுள்ளனர்.

16. போக்கிலி

சிலரைத் திட்டுப் போது 'போக்கிரிப் பயலே' எனக் கடிந்து வசை கூறுவர். போக்கிலி என்பதே போக்கிரி ஆகிவிட்டது. அது பேச்சில் ஏற்பட்ட திரிபு; தப்பு. போக்கிடம் இல்லாதவன், புகலிடமின்றிப் போனவன் தீங்கு செய்யவும் திருடவும் முரட்டுத்தனம் செய்யவும் துணிந்ததால், போக்கிலி, ஒரு கலகக் காரனைக் குறிக்கலானது; தீயவனைச் சுட்டியது.

அனாதையை 'ஏதிலி' என்பார்கள். 'ஏதுமிலித் தனியனேற்கே' என்பார் மாணிக்கவாசகர்.

போக்கிலிகளும் ஏதிலிகளும் இல்லா நாடே நல்ல நாடாகும்.

17. மெல்ல மெல்ல

'மெல்லநட மெல்லநட உன் மேனி என்னாகும்' என்று திரைப்படப் பாடல் ஒன்று இசைக்கிறது. 'மெல்ல என்பதற்கும் மெள்ள என்பதற்கும் என்ன வேறுபாடு? 'மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி' என்பது புறநானூறு (73). 'மெல்லப் பேசு' என்று மெல்லியலைக் கேட்பது இன்றைய திரையிசை. இச்சொல் அழுத்திப் பேசி 'மெள்ள' வாகிவிட்டது. இப்போது மெல்ல என்பது மகளிர் நடப்பது போல் மென்மையாக என்றும் 'மெள்ள' என்பது விரைவின்றி என்றும் பொருள்தருவன போல் தோன்றுகின்றன. 'மெல்லப் பேசு' என்றால் சத்தமின்றி என்றும் 'மெள்ளநட' என்றால் விரைவின்றி மெதுவாக என்றும், இதுபோல் இடம் நோக்கிப் பொருள்படும். பேச்சில் 'மெள்ளவா, மொள்ள வா, மொள்ளமா வா'

என்று திரிக்க முடிந்த அளவு திரிப்பதைப் பார்க்கலாம். இவற்றை மெல்ல மெல்லத் திருத்தியாக வேண்டும். 'மெல்லத் தமிழினிச் சாகும்' என்று எவனோ ஒரு பேதை பாரதியிடம் கூறினதாக அவர் பாடியுள்ளார். அந்த நிலை வராமல் காக்க வேண்டும்; மெல்ல மெல்ல முன்னேற வேண்டும்.

மென்மையிலிருந்து பிறந்த மெல்ல, எவ்வாறோ மெள்ளவாகி விட்டது; பொருளும் வேறுபட்டுவிட்டது. சிலபோது பொருளிலும் கலப்பேற்பட்டுவிட்டது.

மெள்ள மெள்ள

என் எழுத்தைப் படித்த சோளிங்கர் கே.கே. தாதாசாரி தினமணியில் கீழ்வருமாறு எழுதியிருந்தார்; –

மெல்ல என்ற சொல்லை அழுத்திப் பேசி 'மெள்ள'வாகிவிட்டது என்று கூறப்பட்டுள்ளது சரியல்ல. இந்த இரு சொற்களுக்கும் வேறுபாடு உண்டு. திருப்பாவை ஆறாம் பாசுரத்தில் 'மெள்ள எழுந்து அரி என்ற பேரரவம்'... என்று வருவதைக் காண்க. திருமங்கை ஆழ்வாரின் பெரிய திருமொழி 8ஆம் பத்து 10ஆம் திருமொழி 7ஆம் பாசுரத்தில் 'துள்ளுநீர் மெள்ளத் துயின்ற பெருமானே' என்று வருகிறது. இவற்றினை மெல்ல எனத் திருத்த முடியுமா? ஆகவே மெல்ல, மெள்ள எனும் இரு சொற்களும் தமிழில் உண்டு.

எனவே மெல்ல - மென்மையாக; மெள்ள - மெதுவாக, அமைதியாக, விரைவுபடாமல் எனப் பொருள் கொள்ளலாம்.

18. சீயக்காயா, சிகைக்காயா?

எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் போது தேவைப்படும், இது சீயக்காய் எனவும் கூறப்படும்.

சீய்த்தல் - அழுக்கை நீக்குதல். மலையாளத்தில் 'சீயாக்காயி' என்றே வழங்குகிறது. 'சீயக்காய்ச் சடங்கு' என ஓர் இனத்தாருள் வழங்குவதைத் தமிழ்ப் பேரகராதி விளக்குகிறது. சீயா - ஒரு மரம் என்பார் நா.கதிரை வேற்பிள்ளை. சீயாக்காய் - அரைப்புக்காய் என்பார் அவர். இதைப் பேச்சில் 'அரப்பு' என்பர். சீயா மரத்துக் காய் சீயாக்காய் - பிறகு அதையே சீயக்காய் என்றனர்.

சீயா முன்றில் - குப்பை நீக்காத முற்றம் (புறம் 316-2)

கால் சீயா முன் - இருளைப் போக்கு முன்பு (சிலம்பு. 9-79)

சீய்த்தல் - சிறிது சிறிதாக வெட்டி, நீக்குதலையும் உலக வழக்கில் குறிக்கும். பெனிசிலைச் சீவுதல், சீய்த்தலின் மறுவடிவம். இச்சீயக்காயை அரைத்து, உடல் முழுவதும் தலை உட்படத் தேய்த்துக் குளிப்பது, இன்றைய சோப்புக் குளியலைவிட மேலானது. எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் போது இது மிகவும் பயன்படும். இதைத் தெலுங்கு முதலான பிற மொழியினர் சிகைக்காய் என்றது ஒலித்திரிபு. அது தமிழிலும் ஏற்பட்டுவிட்டது என்றாலும் சீயக்காய் என்பதே பெருவழக்கு. சிகைக்கு மட்டும் பயன்படுவதன்று இது. ஒலித் திரிபான இது தவறு. நாம் சீயக்காய் என்றே வழங்க வேண்டும்.

சிகை வடசொல், காய் தமிழ்ச் சொல். ஆயினும் இந்தி முதலிய மொழிகளில் எல்லாம் இது 'சிகைக்காய்' என்றே வழங்குகிறது. நம் சொல் ஒன்றைப் பிறமொழிகள் பலவற்றில் ஏறச் செய்திருப்பதால், இதைத் தலையில் வைத்துக் கொண்டாடலாம் போல் தோன்றுகிறது.

19. வெந்நீரா வென்னீரா?

வெம்மையான நீர் வெந்நீர்தான். சிலர் சூடான வெந்நீர் கேட்பார்கள். அவர்களுக்குக் கொதிக்கிற வெந்நீர் ஊற்ற வேண்டும். தண்மை + நீர் = தண்ணீர். நன்மை + நீர் = நன்னீர். வெம்மை+நீர்=வெந்நீர். இவை பண்புத் தொகைப் புணர்ச்சி எனப்படும். வெந்நோய் என்பது வெப்பு நோய். இதை 'வென்னீர்' என்பது கூடாது.

20. இங்ஙனம்

'ங'கர வரிசையில் 'ங' முதல் எழுத்தும் 'ங்' மெய்யும் மட்டுமே பயன்படுகின்றன. அதனால் தமிழ் நெடுங்கணக்கில் ஙா முதலான ஏனைய பதினோர் எழுத்தும் வாழ்கின்றன. 'ங' - இங்ஙனம் தன் இனத்தை வாழவைப்பதுபோல், நீயும் உன் சுற்றத்தை வாழவைக்க வேண்டும் என்று சொல்ல வந்த ஔவையார் 'ஙப்போல் வளை' என்றார். ஙனம் - இடம், விதம். சுட்டு, வினாவுடன் சேர்ந்தே வரும். இங்ஙனம், அங்ஙனம், எங்ஙனம், யாங்ஙனம். இப்படி, அப்படி, எப்படி, இவ்வாறு, இவ்விதமாக. பெரும்பாலும் மடலை எழுதி முடிக்கும்போது இப்படிக்கு இன்னார் எழுதியது என்பதை 'இங்ஙனம்' என எழுதினர். பழந்தமிழில்

'ஙனம்' காணப்படவில்லை. இங்ஙன், அங்ஙன் என்ற சொற்கள் திராவிடமொழிகளில் காணப்படுகின்றன. தமிழிலும் பேச்சு வழக்கில் அங்ஙனே, இங்ஙனே எனக் காணப்படுகின்றன. எங்ஙனமாயினும் இங்ஙனம் என்பதே நல்லது. இங்கனம் என எழுதுவது தவறு.

21. அலக்கழித்தல்

உடம்பாடும் உடன்பாடும் தடுமாறுவதுபோல, அலக்கழித்தலும் அலைக்கழித்தலும் தடுமாறுகிற சொற்களாகும். அலக்கழித்தல் உலக வழக்கில் அழகுகாட்டுதல், 'ஈ' என இளித்துப் பல்லைக் காட்டி அவமதித்தல். இன்று தமிழுணர்வு அலக்கழிக்கப் படுகிறது என்றால், அவமானப் படுத்தப்படுகிறது என்பது பொருள். பொருள் வளர்ச்சி பெற்று, அலக்கழித்தல் - துன்பப்படுத்தல் என்றும் ஆகும். அலக்கண் - துன்பம். அலத்தல் - துன்பப்படுதல்; அலந்தோர்க்கு - வறுமையுற்றவர்க்கு. ஊழல் அரசியல்வாதிகள் மக்களை அலக்கழிக்கின்றனர் என்றால் வறுமையுற்று வாட வைக்கின்றனர் என்பது பொருள். சிறுபிள்ளைகளுக்கு 'அலக்கொடுக்க முடியவில்லை' என்பர். அக்குழந்தைகள் செய்யும் துன்பத்திற்கு ஈடுகொடுக்க முடியவில்லை என்பது கருத்து.

22. அலைக்கழித்தல்

அலையவிடுவது இது. அலைத்தல் - வருத்துதல். அலைக்கழிதல் - அலைந்து வருந்துதல். தமிழுணர்வுடன் பேசியதற்காகத் தலைவர்கள் சிலர் சிறையிலடைக்கப் பட்டு, அலைக்கழிக்கப் படுகின்றனர். ஊழல் அரசியலாரும் அதிகாரிகளும் ஒரு சிறு காரியத்திற்கும் கையூட்டுக் கேட்டு மக்களை அலைக்கழிக்கின்றனர்.

தமிழுணர்வு இன்று அலக்கழிக்கப்படுகின்றது. தமிழ்வழிக் கல்வி இன்று தமிழக அரசுகளால் அலைக்கழிக்கப் படுகின்றது. அலக்கழிப்பவர்களை அலைக்கழித்து ஓட்டும் காலம் விரைவில் வரும்.

23. இரத்தம்

சிலர் இரத்தம் தமிழன்று எனக் கருதுவர். ரத்தம் என்றே எழுதுவர் 'அரத்தப் பூம்பட்டு அரைமிசை உடீஇ' (சிலம்பு. 14-86) எனவரும். செந்நிறப் பூம்பட்டை மகளிர் உடுத்தினராம். 'பொங்கொளி அரத்தப் பூம்பட்டு உடையினன்' (22-46) எனச் சிலம்பில், பூதம் ஒன்று வண்ணிக்கப்படுகிறது. அரத்தப்பூ - குங்குமப்பூ.

அலத்தகம் - அரத்தகம். அதாவது செந்நிறச் சாதிலிங்கம். துகில் வகையில் அரத்தம் என்பதும் குறிக்கப்படுகிறது. அரக்கு என்று செந்நிறச் சாதிலிங்கம் குறிக்கப்படுகிறது. செம்பரத்தம்பூவிலுள்ள அரத்தம் பிறமொழியிலிருந்து வருதல் இயலாது. அரத்தம் பொன்னையும் பொன்னிறமானவற்றையும் குறித்துளது. செவ்வாய்க்கோள் அரத்தன் எனப்பட்டான். அதனால் குருதியை இரத்தம் என ஆள்வது நன்று; ரத்தமானது

பேச்சுவழக்கு. அது போலவே இரத்துச்செய்யப்பட்டது - இராது செய்யப்பட்டது என்பதையும் ரத்துச் செய்யப்பட்டது என்றே பேசி, எழுதி வருகின்றனர். அரத்தம் ரத்தமாகிப் பிறகு இரத்தமானது போல, இரத்தும், ரத்தாகிவிட்டது. ஆணை ஒன்று இரத்துச் செய்யப் பட்டது என்றால் செந்தமிழ்போல் இருப்பதால், அவ்வாறு வெளியிடவே தயங்குகிறது தமிழனுள்ளம். அவன்தான் தமிழ்ப் பழக்கத்தையே 'இரத்துச்'செய்து விட்டானே?

24. கண்ணராவி

கண்ணராவியாக இருந்தது என்பதைக் 'கன்ராவி' என்றே, இன்றும் சில ஏடுகள் எழுதும்பொழுது, அது நம் கண்களை அராவுகிறது. அராவுதலை - ராவுதல் என்று பேச்சில் 'அ'வை அராவி எடுத்துவிடுவார்கள். கண் + அராவுதல். அராவி - அராவுவது. 'ராவி'க் கூர்மைப் படுத்தலாம். அராவுவதிலிருந்து வந்ததுதான் அரம். அரம்பம் என்பதும் அதன் அடியிலிருந்து வந்ததே. அதை 'ரம்பம்' என்று முதலெழுத்தை அறுத்துவிடுவர்.

இரவுப்பொழுதை இராப்பொழுது; ராப்பொழுது; ராத்திரி, ரப்பொழுது என்றெல்லாம் வாய்ப்பேச்சில் சிதைப்பர். மகளிரே கூடி, இரவில், நிலவைக் கொண்டாடும் ஒருவிழா மாசி மாதம் நடைபெறும். அதை இராவாண்டை போடுதல்; ராவாண்டை எனச் சொல்வர். இரவுத் தெய்வம் இரவு + ஆண்டை. அது ராவாண்டை ஆகிறது.

இலக்கு - குறிப்பிட்ட இடம். நல்ல தமிழ்ச்சொல். அந்த இலக்கில் அவன் நின்றுகொண்டிருந்தான். இலக்குப் பார்த்து அம்பெய்வது பண்டைய வழக்கம். இதை 'லக்கு' எனத் திரிப்பர். 'அந்த லக்கிலே வச்சுப் பார்த்தேன்' என்பர்.

இதுபோல் உலாவுதல் - லாவுதலாகிவிடும். சிலர் நம் வீட்டருகே உலாவிக்கொண்டேயிருந்து, நோட்டம் பார்த்து, உலாவிக் கொண்டு போய்விடுவார்கள். இதை 'லாவிக்கினு' போயிட்டான் என்பது பேச்சு வழக்கு. ஆங்கில நாளேடுகளைப் பாருங்கள். ஆங்கிலம் மிகக் கடினமான மொழி. எழுத்துக் கூட்டலுக்கும் உச்சரிப்புக்கும் தொடர்பே இராது. ஒவ்வொரு சொல்லின் எழுத்துக் கூட்டலையும் நினைவில் வைத்திருக்கவேண்டும். Honour என்பதை 'ஆனர்' என ஒலிக்க வேண்டும். Honour என்றாலும் onor என்றாலும் அதே ஒலிப்புத்தான். ஆனால் மாற்றி எழுதினால், எழுதுபவன் Honour (மதிப்பு) போய்விடும்.

தமிழிலும் கட்டளைத் தமிழையே எழுத்தில் பயன்படுத்துங்கள். இன்றேல் தமிழ் அராவப்பட்டுவிடும்; பகைவர்கள் உலாவிக் கொண்டுபோய்விடுவார்கள்.

25. நிரம்ப

நிரம்ப எனும் சொல் ரொம்ப ஆனது நிரம்பவும் வேதனை தருகிறது. தொட்டியில் தண்ணீர் 'ரொம்பிவிட்டது' என்கிறார்கள். 'ரொம்பக் கோபக் காரன்' என்பார்கள். 'ரொம்பப் பேசாதே; அப்புறம் நடக்கிறதே வேறே' என்று சீறுவார்கள். 'ரொம்பத்தான்

பீத்துகிறார்' என்பதுண்டு. எல்லாமே நிரம்பவிலிருந்து, நிரம்பவும் மாறிப்போன சொற்கள்.

26. எல்லை

மாவட்டங்களிடையே, பொதுப்பணித்துறையினர் எல்லைக்கல் நிறுவும்பொழுது 'எல்கை' என்று போடுகின்றனர். 'எல்லை' என்பதே முறையான சொல். 'எல்லைக்கல்' அனைத்திலும் எல்லை என்று குறிக்குமாறு, பொதுப்பணித்துறையினர்க்கு அறிவுறுத்த வேண்டும். பத்திரம் எழுதும்போது நான்கு எல்கைக்குட்பட்ட என எழுதும் பழக்கம் இன்றும் தொடர்ந்து வருகிறது! இப் பத்திரம் எழுதுபவர்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் எழுதுவதால், பிழை தொடர்கிறது. 'நான்கு எல்லைக்குட்பட்ட' என்றே எழுதவேண்டும். பத்திரப் பதிவு அலுவலகங்கள் அனைத்திற்கும் பிழையின்றிப் பத்திரம் எழுதும் முறையை, முன்மாதிரியாக எழுதி, அச்சிட்டு அனுப்புவது நல்லது. இதனைத் தமிழ் ஆட்சிமொழித் துறை ஏற்க வேண்டும்.

27. கட்டிடம், கட்டடம்

இடம், அடம் என்பன இறுதி ஒட்டுக்கள் எனப்படும். 'கட்டு' - கட்டப்படுவது. நகரத்தார் வழக்கில் இரண்டாங்கட்டு, மூன்றாங்கட்டு, சமையற்கட்டு, படிக்கட்டு என வழங்குவன கட்டடப் பகுதிகளாகும். கட்டிடம் என்பதைக் கட்டுவதற்கான இடம் எனக் கொள்ளலாம். அதை மனையிடம் எனவும் சொல்வர். கட்டடம் என்பதைக் கட்டப்பட்ட மனையைக்

குறிக்கப் பயன்படுத்தலாம். எனினும் புதிய சொல்லாக்கமாகிய இதனைக் கட்டிடம் எனப் பெரும்பான்மையாகவும் கட்டடம் எனச் சிறுபான்மையாகவும் கட்டப்பட்ட வீட்டைக் குறிக்கின்றனர். 'கட்டூர்' என்பது முன்பு போர்க்களப் பாசறையைக் குறித்தது. அது தற்காலிகமாகக் கட்டப்படுவது. இடம், அடம் என்பன பொருளற்ற பின்னொட்டுக்களே. கட்டிடம் எத்தனை சதுரஅடி; அதில் கட்டடம் மட்டும் எத்தனை சதுரஅடி; காலிஇடம் எவ்வளவு எனக் கேட்கலாம் என்பது, இன்றைய வழக்கில் பின்பற்றப்படுதல் தெளிவுதரும்.

28. தமிழ்நாடு அரசுப் பேருந்து

ஆறு + பாசனம் = ஆற்றுப்பாசனம். நாடு + பற்று = நாட்டுப்பற்று. ஆடு + குட்டி = ஆட்டுக்குட்டி. மாடு+ வண்டி = மாட்டுவண்டி. தமிழ்நாடு + முதல்வர் = தமிழ்நாட்டு முதல்வர். இவ்வாறு வன்தொடர்க் குற்றியலுகர ஒற்று வரும் சொல்லோடு சேரும்போது, இரட்டிப்பது தமிழின் இயல்பு. 'தமிழ்நாடு அரசுப் பேருந்து'; தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம்'; 'தமிழ்நாடு அரசுப் பணியாளர்'; 'தமிழ்நாடு நுகர்பொருள் வாணிகக் கழகம்' - என இவ்வாறு தமிழ்நாடு என்றுமட்டும் வரலாமா? இங்கும் 'தமிழ்நாட்டு' என்றல்லவா வரவேண்டும்?

ஆயினும் நாடு இழவோன், காடு கிழாள் (கொற்றவை), காடகம் (காடு) என ஒற்று இரட்டிக்காமலும் மிகச்சிறுபான்மை வந்துள்ளன. இதை இலக்கண உரையாசிரியர்கள் காட்டியுள்ளனர். (நன்.183)

'தமிழ்நாடு' என்பது ஒரு பெயராக நின்று, அதனுடன் அரசு, கழகம், ஆணையம் எனச் சேரும்போது தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு தேர்வாணையம் என வரலாம். மூதறிஞர் வ.சுப.மா.வும் இதற்கு உடம்பட்டு எழுதியுள்ளார்.

29. இழிவு

முதற்பொருள் கீழே இறங்குதல். அருவி மலை மேலிருந்து இழிகின்றது (இறங்குகின்றது). இழிபுனல் - கீழே வழிந்து வீழ்ந்த நீர். இழிதர - இறங்க. இழிந்து - இறங்கி. மேலேயிருந்து கீழே இறங்கும் இது, 'தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர் நிலையின் இழிந்தக் கடை' (குறள் 964) என்று கீழே விழுதலையும் உயர்நிலையிலிருந்து தாழ்தலையும் ஒருசேரக் குறிக்கின்றது.

'கட்டில் நிணக்கும் இழிசினன்' எனக் கட்டில் பின்னும் தொழிலாளி குறிக்கப்பட்டான் (புறம் 82). இழிவுபட்டது எனக் கலித்தொகையிலும் வருகிறது (72, 94). இழிபிறப்பாளன் என்றே (புறம் 170) மருத்துவன் தாமோதரனார் பாடுகிறார். தான் இழிவுபடுதலும் பிறரால் இழிவுபடுத்தப்படுதலும் வளர்ச்சிப் பொருளாய்ப் பழம் பாடல்களில் காணப்படுகின்றன.

இன்று சில பள்ளிகளில், தமிழில் பேசினால் தண்டம் என்று தமிழ்மொழி இழிவுபடுத்தப் படுகிறது. ஆட்சிக்கு வருபவர்கள் தங்கள் தாய்மொழி இழிவுபடுவது கண்டும், மானமிழந்த இழிசினர்களாய் உள்ளனர். திருவள்ளுவர் 'இழிந்த பிறப்பாய்விடும்' என்றது இவர்களுக்கு மிகவும் பொருந்தும். ஊழலும் பதவி

மோப்பமும் கடைப்பட்ட இழுக்கமாயின. இழிவு (இறங்கி) என்ற சொல், இழிவுபட்டுப் (இகழ்ச்சிப் பொருள்பட்டு) போனதுபோல் இவர்களும் நிலையின் இழிந்ததால், தலையின் இழிந்த முடியாகிப் போயினர்! நாம் சொல்லவில்லை; திருவள்ளுவர் திட்டுகிறார்!

30. இளிவு

இளிவு எனும் சொல் வேறு. இழிவு, இளிவு இரண்டும் தடுமாறும் சொற்கள். இளிவரல் - அவமதிக்கப்படுதல். இளி - அவமதி, நகையாடு, இளிவுசெய், பரிகாசம் பண்ணு. ஒருவனை இழிவுபடுத்துதல் என்பது தாழ்த்துதல், கீழே இறக்குதல் ஆகும். அவனை இளிவுபடுத்துதல் அவமதித்தல், இகழ்ந்து எளியனாக்குதல், பல்லைக் காட்டிச் சிரித்து நோக வைத்தல் ஆகும். இதனால் 'இளிவரல்' எண்சுவையுள் ஒன்றாயிற்று. முதுமை, நோய், பயனற்ற உழைப்பு, வலிமையின்மை எனும் நான்கினாலும் இளிவரல் சுவை தோன்றும். எள்ளிநகையாடுவதால் ஒருவன் இளிக்கப்படுகிறான். 'இளிச்சவாயன்' என்பது ஓர் உலக வழக்கு. 'இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு' (குறு. 283) என்பது இரத்தலைவிட அவமானமானது. இதற்கு 'இழிவு' என்றே பொருள் கூறுவர். 'இன்மையது இளிவு' (நற். 262) - வறுமையால் வரும் இளிவரவு அல்லது மானம் குன்றுதல். 'இளிவு தலைத்தரும்' (நற்.284) - இகழ்ச்சியைத்தரும். இச்சொற்களின் நுட்பமான பொருள் வேறுபாட்டை உணர்ந்து பயன்படுத்த வேண்டும். கொள் எனக் கொடுக்கும் நிலையிலிருந்தவன் 'ஈ' என இரக்கும் நிலைக்கு

இறங்குவது இழிவு. அவனைப் பிறர் இளிவுபட நோக்குவர். தாய்த்தமிழ் மிக உயர்ந்த நிலையிலிருந்தது. அதை 'இழிவு' படுத்துபவர்களை மக்கள் இளிவுபட நோக்கும் காலம்வரின் தமிழ் உயரும். இந்த 'இளிவு' இழிவைவிட மோசமானது; காறி உமிழத்தக்க மானமற்ற ஒருநிலை. இளிவை - மானம் குன்ற வாழ்தல் என்பார் கணக்காயர் ச.சோ. பாரதியார்.

31. உள்ளூற மகிழ்தல்

அவன் உள்ளூற இன்பக்கனவுகளில் ஆழ்ந்தான். சிலர் இதை உளளூர என எழுதுகின்றனர். உள் உற - உள்ளத்தினுள்ளே பொருந்த. மனத்திற்குள் ஊறிப் பிறரறியா வகை மகிழ்வதே உள்ளூற மகிழ்வது. இதை உள் + ஊற = உள்ளூற என்றே எழுத வேண்டும். உள்ளே ஊற்றெடுக்க இன்புறுவது இது. சில ஆங்கில நாளேடுகள் நாள்தோறும் தமிழுக்கும் தமிழினத்திற்கும் எதிராக எழுதியே உள்ளூற மகிழ்ச்சியடைகின்றன. தூய இன்பமே நல்லின்பம். தொல்காப்பியர் 'அல்லல் நீத்த உவகை' என்பார். சூழ்ச்சித் திறனுடையார் தம் அறிவுத்திறமையால், தமிழின அழிவுக்கு வழிவகுப்பன எல்லாம் அவரையே பாதிக்கும் என நாம் உள்ளூற நம்பலாம்.

இதனுடன் 'அள்ளூற' எனும் சொல்லை ஒப்பிடவேண்டும். அள்ளூறல், உள்ளூறலைவிடச் சிறிது பழையசொல். உள்ளூற புதுச் சொல்லாக்கம். அள்ளூறல் - வாயூறுதல். குழந்தை 'அம்மா' என்னும் போதே, நாவில் அள்ளூறும். வாயில் எச்சில் ஊறுதல், உள்ளெழும் உவகைக்கு அறிகுறி. 'அமுதன் என்று

அள்ளூறித் தித்திக்க', என்பது திருவாசகம். உள்ளூற மகிழ்ச்சிதரும் பத்திமையால் வருவது அது.

32. கோவையும் கோர்வையும்

'கோ' என்ற வினைச்சொல் ஒன்றைக் கோக்கும்படி ஏவுவது. அதைக் 'கோர்' என்பது உலக வழக்கு. 'கோர்' என்பதும் அடிச்சொல்லாக இருந்திருக்கக் கூடுமென்பது மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணரின் கருத்து என்பர்.

கோத்துத்தரும் மாலை கோவை. திருச்சிற்றம்பலக் கோவை, தஞ்சைவாணன் கோவை என்பன கோவை நூல்கள். இவை நானூறு கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் அடங்கிய அகப்பொருள் இலக்கியங்கள். மாணிக்க வாசகரிடம் இறைவனே, 'பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக!' எனக் கேட்டதாகக் கூறுவர்.

கோத்தல், கோவை, கோக்கின்றாள், கோக்க வேண்டும் என்று கூறுவன இலக்கிய வழக்கு. உலக வழக்கில் கோர்த்தல், கோர்வை, கோர்க்கின்றார், கோர்க்க வேண்டும் எனக் கூறுகின்றனர். கோத்தலை விடக் கோர்த்தலில், ஒரு தெளிவு தென்படுவதுபோல் உளது.

சொற்கோவை வேண்டும். கை கோத்து நின்றனர் என்பதைக் கை கோர்த்து நின்றனர் என்றால் 'தப்பு' என்று அடித்துவிட வேண்டாம். பழஞ்சொல் கோவையும் இருக்கட்டும். புழங்கும் சொல் கோர்த்தலும் இருக்கட்டும். 'கடிசொல் இல்லைக்

காலத்துப்படினே' என்பது தொல்காப்பியம். என் செய்வது? கோவையாகச் சொல்வதைக் கோர்வையாகத் தொடுக்க வேண்டியுளது.

33. நீர்த்துப்போதல்

அண்மையில் ஒரு சிறந்த எழுத்தாளர், 'தமிழ்வாழ்க' என முழங்கியவர்களின் கொள்கைகள் நீர்த்துப் போய்விட்டன என்று எழுதியிருந்தார். நீர்த்துப் போதல், கட்டியாக - கனமாக - திடமாக - திண்மையாக இருந்தவை, உருகி நீராகி ஒன்றுமற்றுப் போயின எனும் கருத்தில் எழுதியிருந்தார். இது புதுச் சொல்லாக்கம்.

நீர்மம் - திரவநிலை பற்றிய அறிவியல்கலைச்சொல். நீர்த்தல் - நீராதல், நீர்போலாதல், கரைந்துபோதல். அறிவியலில் திடப்பொருள்கள் திரவப் பொருள்கள் ஆக நீர்த்துப் போவதுண்டு. அதுவே குறியீடாக, மனத் திண்மை - உறுதிப்பாடு எல்லாம் நீர்த்துப்போய், வெறுமனே 'சடமாய்' நிற்கும் அரசியலார்க்கு மிகவும் பொருந்தும்.

34. நீற்றுப்போதல்

உலகில் இது மிகுதியாக வழங்கியது. நெருப்புக் கூவிளரியும். நெருப்புப் பற்றிய பொருள் தணலாகி இறுதியில் சாம்பல் பொடியாகும். சுண்ணாம்புக் காளவாயில் வைக்கப்பட்ட கற்கள், கூவி எரிந்த காளவாய் நெருப்பினால், நீற்றுப்போய் - தூளாகிப் பொடியாகும். அதையே நீற்றுப் போதல் என்பர். இதனால் சுண்ணம்/சுண்ணாம்பு நீறு எனப்படும்.

சாணியைத் தட்டிக் காயவைத்துச் சுட்டால், அது நீற்றுப் போய் வெண்பொடியாகும். நீற்றுப் போனதே நீறு. அதுவே நெற்றியில் பத்திமையுடன் இடப்படும் போது திருநீறு. 'மந்திரம் ஆவதும் நீறு, வானவர் மேலதும் நீறு' என்பது இதுதான்.

நீற்றுப்போதல் சாம்பற்பொடியாகிப்போதல். காரியம் நீற்றுப்போனது என்றால், உணர்ச்சி அடங்கி ஒன்றுமில்லாது, பயனின்றிப் போனது என்பது பொருள். மக்களின் எழுச்சிக்கு உணர்வு ஊட்டாவிட்டால், பொங்கி எழுந்த உணர்ச்சிநெருப்பு, நீற்றுப்போகும்.

வடமொழியை ஆட்சிமொழியாக்கிய மகேந்திரப் போத்தரையன் எனும் பல்லவப் பேரரசன், திருநாவுக்கரசரைப் படாதபாடு படுத்தினான். அவர் தமிழர், தமிழை வற்புறுத்தினார் என்பதற்காக. அவனொடு சேர்ந்து, சமணத்தை ஏற்ற நாவுக்கரசரால், தமிழை விட்டுக்கொடுக்க முடியாமல் போனது. அதனால் பகைமை வளரவே, தமிழர் குலதெய்வமெனத்தகும் நாவுக்கரசரை அப்பல்லவ வேந்தன் மலைமீதிருந்து உருட்டிவிட்டான்; கல்லைக் கட்டிக் கடலிற் போட்டான்; யானைக் காலில் இடறவிட்டான். அம்மட்டோ, 'சுண்ணாம்புக் காளவாய்' எனப்படும் 'நீற்றறையில்' போட்டு மூடிவைத்தான். தமிழ் வெந்து போகவிடவில்லை. 'மாசில் வீணையும் மாலை மதியமும்' என்று தொடங்கும் பதிகம் பாடி, தமிழால் வென்று, வெளிவந்தார் நாவுக்கரசர். அவரைப் பிடித்துவரப் படைஞரை அனுப்பிய வேந்தனுக்கு, 'நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்' என்றும்,

இறைவனுக்கே யாம் அடிமை யாவோம் என்றும் துணிவுடன் மறுமாற்றுத் திருத்தாண்டகம் பாடி அனுப்பினார் நாவுக்கரசர்.

இன்றும் அதே கொடுமைகள் தொடர்கின்றன. பல்லவப் பேரரசு செய்தது போன்ற கொடுமைகள் திரும்பவும் தமிழ்மீது பாய்கின்றன. தமிழ், தமிழின விடுதலைக்கு நாவுக்கரசர்கள், சம்பந்தர்கள் தேவைப்படுகிறார்கள். தமிழ்ப்பகை நீற்றுப்போகும், நீற்றுப் போக வேண்டும் என இறைவனை வேண்டுவோமாக!

35. முந்நூறு

வங்கிக் காசோலையில் 300 என எண்ணாலும் முந்நூறு என எழுத்தாலும் எழுத வேண்டும். முன்னூறு என்பது முன்னைய நூறு என வேறு பொருள்படும். மூன்று + நூறு = முந்நூறு ஆகும்.

முன்னாள் அமைச்சர் என்றால் முன்பு அமைச்சராக இருந்தவர் என்று பொருள்படும். முந்நாள் அமைச்சர் என்றால் மூன்றுநாள் மட்டும் அமைச்சராக இருந்தவர் என்றாகிவிடும். இந்நாளில் இவ்வேற்றுமை அவசியம் தேவைப்படுகிறது.

தன் + நலம் = தன்னலம். அது சுயநலம். தமிழன் மிகவும் தன்னலமுடையவன். தமிழர்கள் தந்நலம் மிக்கவர்கள். தம் + நலம் = தந்நலம். இது பன்மை வடிவம். ஆனாலும் தமிழர்கள் தன்னலமுடையவர்கள் என்று சொல்லலாம். ஒவ்வொருவருக்கும் உரியது தன்னலம். அதனால் தமிழரைப்போல் தாய்மொழியை

வானளாவப் புகழ்பவர்களையும் உலகில் கண்டதில்லை; அவர்களைப் போல் 'தன்னலம்' மிக்கவர்களையும் உலகிற் பார்த்ததில்லை எனலாம்.

36. எத்தனை, எத்துணை?

எத்தனை என்பது எண்ணிக்கை சார்ந்தது. துணை என்பது அளவு, பருமன், குணம், நிறம் பற்றியது. எத்தனை பழங்கள்? எத்தனை பேர் கலந்து கொண்டார்கள்? எத்தனை மணிக்கு வருகிறாய்? தொடர்வண்டி விபத்தில் இறந்தவர் எத்தனை பேர்? எத்தனை தடவை சொல்வது? எத்தனை வண்டிகள், எத்தனை கார்கள், எத்தனை விமானங்கள்? - இவ்வாறு வினவலாம். அத்தனையும் எண்ணிக்கை பற்றியன. இத்தனையுமா என வியக்க வேண்டாம்.

எத்துணை நல்லவர்? எத்துணை வலிமை? எத்துணைப் பெரியவர்? எத்துணைச்சிறப்பு? இத்துணைச் சிவப்பா? இத்துணை அகலமா? நீங்கள் செய்வது தமிழுக்கு எத்துணை நன்மை தெரியுமா? எத்துணை அளவு உழைக்கிறோமோ, அத்துணை அளவு பயனுண்டு.

அகராதிகளில் எத்தனை, எத்துணை, இரண்டுக்கும் 'எவ்வளவு' எனப் பொதுப் பொருளே போடப்பட்டுள்ளது. 'எத்துணையாயினும் ஈதல் நன்று' எனப் புறநானூற்றில் வருகிறது (141). எத்துணைக்குப் பிறகே, எத்தனை என்ற சொல் வந்துளது. எனினும் இன்று அளவு, பயன், பருமன், பண்பைக் குறிக்கவே எத்துணை என்ற சொல்லை ஆளவேண்டும் என்பது,

நம்மில் எத்தனை பேருக்குத் தெரிந்துளது? மாநாட்டிற்கு அத்தனை உறுப்பினரும் வந்திருந்தனர் என்றே எழுத வேண்டும். அத்துணைப்பேரும் என்பது தவறு. அடடே, எத்துணைச் சிறப்பு என வியக்கலாம்.

37. மூடையும் மூட்டையும்

மூடு + ஐ = மூட்டை என்று வரும். சிறுபான்மை இஃது இரட்டிக்காமல் வருமிடங்களும் உண்டு. பொருளுணர்ச்சிக்காகவே புணர்ச்சிஇலக்கணம். பொருள் தெளிவுபெற வேண்டுமேல், பொதுவான புணர்ச்சிவிதி கைவிடப்படும். பொருள் தெளிவுபடுமாறு சொற்களை ஆளுதலே, நம் முன்னோரின் மொழி நூலறிவுக்குத் தக்க சான்றாகும். இன்றும் சேர்த்துப் புணர்த்தலுக்கும் பிரித்து இடம் விட்டு எழுதுவதற்கும் சொல்லிச்சொல்லிப் பார்த்துப் பொருளை அறிந்து எழுதிவிடலாம். ‘காரிகை கற்றுக் கவிபாடுவதில்லை’. கவி எழுதும் ஆற்றல் இயல்பிலிருந்தால், அக்கல்வி துணை செய்யும். புணர்ச்சி இலக்கணம் முழுமையும் கற்றபின் யாரும் எழுதத் தொடங்கினர் என்று கூற முடியாது. படித்தும் எழுதியும் உலக வழக்கைக் கூர்ந்து கேட்டும் உணர்ந்தும் ஒருவன் மொழியுடன் பழகுகின்றான். இப்பழக்கம் மிகமிக, அவன் தன்னை அறியாதே தவறின்றி எழுதிவிடுகின்றான். தாய் மொழியின் சிறப்பே அதுதான். அவ்வாறு எழுதுபவனுக்குத் தேவைப்படும்போது இலக்கணம் துணை செய்யும்.

முன்னைய இலக்கியங்களில் மூடை என்றே ஆட்சியுளது. இன்றும் எத்தனை நெல் மூடைகள் உள்ளன; உப்பு மூடையப்பா அது; மூடைக்கணக்கில்

வாங்க வேண்டும்; ஆயிரக்கணக்கான மூடைகள் அடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறே பேசுகிறோம்.

சிலர் மூட்டை, நெல்மூட்டை, பருப்பு மூட்டை என எழுதிவிடுவது தவறன்று. மூட்டைப்பூச்சி என்பர். இதில், மூட்டை என்பதிலுள்ள ஒலிநயமின்மை போன்றவற்றால் பேச்சிலும் 'மூட்டை' மூடைக்கணக்கில் வழங்கவில்லை.

பழந்தமிழில் மூடை என்பது மூடிவைக்கப்படும் தானியக் கோட்டை, தானியக்குதிர் ஆகியவற்றையும் குறித்துளது (புறம். 285). இன்று சாக்கு எனும் கோணிப் பையில் போட்டுப் பொதிந்து மூடை என்று கூறுகிறோம். 'பொதி மூடைப் போர் ஏறி' என்று, போர் போலக் குவிந்து கிடந்த மூடைகளைப் பட்டினப்பாலை குறிக்கிறது (137). நன்றாகக் குலுக்கிக் குலுக்கி உட்செறித்துக் கட்டிவைக்கும் மூடை, 'கடுந்தெற்று மூடை' எனப்பட்டது (பொ.245). 'காலின் வந்த கருங்கறி மூடை (மிளகு)' என்றும் பட்டினப்பாலையில் வருகிறது (186). இப் பொதிமூடைகளைக் கழுதைகள் சுமக்கும். மூடை என்ற ஒருவழக்கையே பின்பற்றுவது தெளிவும் இனிமையும் தரும்.

38. கார்காலம், கார்ப்பருவம்

பொருள் வேறுபடாதபோது, ஓசையினிமைக்கு முதலிடம் தந்துள்ளனர். குளிர்காலம், குளிர்ப்பருவம்; கோடைக்காலம், கோடைப்பருவம்; கூதிர் காலம் கூதிர்ப்பருவம்; கார்காலம் கார்ப்பருவம்; பனிக்காலம், மழைப்பருவம் என்று சில இடத்தில் ஒற்று மிகாதும், மிகுத்தும் வருகின்றமை காண்கின்றோம். சங்க காலம்

என்பதும் அதுபோன்றதே. சங்கக்காலம் ஓசைகருதியும் பொருள் மாறாததாலும் விடப்பட்டது. மூடை எனச் சொல்லப்பட்டதும் ஓசை கருதியே. இதுபோல்வன பலவுள. பொருளுணர்வு முக்கியம். அதற்கு ஊறு நேராது, ஓசையினிமை உண்டாகுமேல், மக்கள் இனிமையை விரும்பியுள்ளனர்.

39. ஆஞ்சநேயர்

அனுமனைச் சிலர் ஆஞ்ஜநேயர் என எழுதியிருப்பது தவறு. தமிழில் ஆஞ்சநேயர் என்றாலே, ஜ ஒலி வந்துவிடும். பஞ்சு, அஞ்சன வண்ணன், எஞ்சியது, நஞ்சு, கொஞ்சுதல் என்று சொல்லிப் பார்த்தாலே உண்மை விளங்கிவிடும்.

40. குட்டம்

ஒரு நோயாகிய இது வந்தால் கைவிரல்கள், கால்விரல்கள் குட்டையாகக் குறைவதைப் பார்க்கலாம். இக்குட்ட நோயைக் குஷ்டம் என்பது மிகவும் மனத்துக்குக் 'கஷ்டமாக'வுளது. கட்டமே கஷ்டமானது. கட்டுப்படுதல், கட்டப்படுதல், வெளிவர இயலாத 'கட்டத்தில்' அகப்படுதல் 'கட்டம்'. அதையும் கஷ்டம் என்றனர். இடுக்கண், இடும்பை, துன்பம், துயரம், கட்டம் என்பன தமிழில் பலவகைத் துன்பங்களுக்கான பெயர்கள்; வெவ்வேறு நிழற்பொருளுடையன.

41. மிடைதல்

'புதுமலர் மிடைந்த மாலை' (குறு. 273) என, 'நெருங்கக் கட்டிய மாலை குறிக்கப்படுகிறது. மிடைதல்

- செறிதல், நெருங்குதல், கலத்தல். மணிமிடை பவளம் - மணியொடு கலந்த பவளம், கலந்து கட்டிய எனலுமாம். (அகம். 304). மிடை - அக்காலத்து நெருக்கிக் கட்டப்பட்ட பரணைக் குறித்ததுமுண்டு. முள் மிடை குடம்பை - முள்ளால் மிடையப்பெற்ற (நெருக்கிக் கட்டப்பட்ட) பறவைக் கூடு (அகம். 270).

பாய் மிடைதல், தடுக்கு மிடைதல், கட்டில் மிடைதல், கூடை மிடைதல் எனல் வேண்டும். மிடைதல் - நெருக்கமாகக் கட்டிப் பின்னுதல்.

மிடைதலை முடைதலென்றது பேச்சு வழக்கு. மிடைதலே பின்னுதலாகும். செவ்விய நடையில் கூடை மிடையும் தொழில்; கட்டில் மிடைவோர் என்பதே நல்லது.

42. ஏற்கெனவே

ஏற்கெனவே நடந்து முடிந்தது. ஏற்கெனவே சொன்னதுதான். இந்தியா ஊழல் பெருச்சாளிகளின் அரசியலுக்குட்பட்ட நாடு என்பது, ஏற்கெனவே உலகமறிந்ததுதான். ஏற்கெனவே இச்சொல் பற்றிச் சிந்தித்தது உண்டு.

ஏலவே என்ற சொல் முன்னமே என்ற பொருளில் வழங்கியுள்ளது. ஏலவே என உலகவழக்கத்திலும் உண்டு. இதுதான் ஏல - ஏலென - ஏற்கென என்றாகி ஏற்கெனவே என்றும் ஆகியுளது. இதைச் சிலர் ஏற்கனவே என எழுதுதல் இனி வேண்டாம். பலர் இதை ஏற்கெனவே அறிந்து நன்கு பயன்படுத்துகின்றனர்.

முன்னைய இலக்கிய நூல்களில் காணப்படாமல், இன்று பெருவழக்காகியுள்ள புத்தாக்கச் சொற்களில் ஒன்று இது. எனினும் ஏற்கெனவே இதன் அடிப்படைச் சொற்கள் பேச்சில் வழங்கி வந்துள்ளன. இதை 'ஏற்கனவே' என எழுதுவது பொருந்தாது என்பது அம் மூலச் சொற்களைப் பார்த்தால் விளங்கிவிடும்.

ஈடு உரைகள் நல்லபல, மணியான பேச்சு நடைச் சொற்களைக் கையாண்டுள்ளன. 'பிரளயம் வருமென்று ஏலக்கோலி' என்பது ஈடு உரை. ஊழி வெள்ளத்தால் உலகம் அழிந்துபோகாமல் முன் கூட்டித்தக்க பாதுகாப்புச் செய்தலை இது குறிக்கிறது. 'ஏலக் கோலுதல்' முன்கூட்டி ஒரு காரியத்திற்கான அடிப்படைகளைச் செய்துவைத்தல், ஊழிக் காலத்தில் கடல் பொங்கி உலகை அழித்து விடுமாதலால், அந்தச் சமயத்தில் தம்மைத் தேடக்கூடாது என்று காத்தற்கடவுளான திருமால் கடலிலேயே பள்ளி கொண்டிருக்கிறாராம்! ''ஆபத்து வந்தபோது நம்மைத் தேடித் திரியவொண்ணாது என்று ஏற்கவே கடலிடங் கொண்டவனை'' என்கிறது ஈடு உரை. ஏற்கவே - முன்னதாகவே.

ஏல - முன்னம் பொருந்த, முன்னதாக. 'ஏலவே' எனவும் இது வழங்கியுள்ளது. ஏற்க (முன்), ஏற்கவே, ஏற்கென (முன்னதாக) என்ற சொல் வழக்குகளும் காணப்படுகின்றன. ஏற்கென என்பதிலிருந்து ஏற்கெனவே தோன்றியுளது. ஏற்க + என = ஏற்கென. ஏற்க + எனவே = ஏற்கெனவே. இன்று இச்சொல் பெருவழக்காகியுளது. எனினும் ஏற்கெனவே பேச்சு நடையில் இது பெரு வழக்காகியிருந்ததை ஈடு உரைகள் எடுத்துரைக்கின்றன.

43. பற்பொடி

பற்பொடி, கற்குவியல், நெற்பயிர், தற்கொலை, முற்போக்கு, பிற்போக்கு, மற்போர் என்பன பல பிரித்துப் பேசப்படுவதில்லை. கூலியாள் என்றே சொல்வர். பாலாடை, மேலாடை, தொழிலாளி, சீருடை பிரிக்க முடியாதன. பிரித்தால் பொருளும் சிலபோது வேறுபடுவன. பல்பொடி என்பதும் அதுபோன்றதே. கல்கண்டு, நூல்கண்டு - சிலரால் பிரித்து வழங்கிப் பழக்கப்பட்டுள்ளன. 'கண்டு'வில் உள்ள 'க', கடமையிலுள்ள 'க' போல ஒலிக்கப்படும். அகம் என்பதிலுள்ள 'க' போல அது ஒலிக்காது. பொருளுணர்ச்சியையே கருதுக. புலப்படுத்துதலே குறிக்கோள். சொற்களைச் சிதைத்தோ, மாற்றியோ வழங்குவதால், நம் கருத்துப் பரிமாற்றமே தடுமாறும். இதற்குச் சொற்போர் வேண்டாம்; மற்போரும் தேவையில்லை. தமிழைக் கற்போர் இவற்றை இயல்பாகத் தாமே அறிவர்.

44. பிணை, பிணையம்

இன்று 'ஜாமீனில் வெளிவிடுவதாக' நீதிமன்றம் கூறும்போது, பிணைக்கு யாராவது வரவேண்டும்; பிணைத் தொகை கட்டவேண்டும் என்பர்.

ஒருவருக்குப் பிணையாக நாம் பத்திரத்தில் ஒப்பம் போட்டால் விழிப்பாக இருக்கவேண்டும். பிணை, பிணையம் என்பன உறுதிமொழிதல், உத்தரவாதம் தருதல், துணைநிற்றல், ஒருவருக்கு மற்றொருவர் பேச்சிலோ, எழுத்திலோ பொறுப்பு ஏற்பது அது. சான்றுக் கையொப்பம் அது. 'சாட்சியாக' வேண்டியிருக்கும்.

புணை - வேறு. அது தெப்பம். ஆற்றிலோடும் படகு வகையில் ஒன்று. சிலர் பிணையைப் புணை என்பர். அது பிழை. 'உனக்கு நான் புணையாக மாட்டேன்' என்பது, உதவமாட்டேன் என்று குறியீடாகப் பொருள் தரலாம். அது பிணை என்னும் பொறுப்புறுதி ஆகாது.

45. சில்லரை

அரை என்பது ஒன்றன் பாதி. ஒவ்வொன்றன் பாதியும் அரையே. அரையின் பாதி கால்; அது அரையின் அரையே. இதனால் அரை என்பது 'பின்னம்' என்று பொருள்படும். சில், சில, சில்ல என்பன பலவல்ல என்று குறிப்பன. சில்லரை என்பது, பலவகையான சிறுதொகைகள்; பின்னத்தொகைகள்; அவற்றுக்கான நாணயங்கள்.

இதனைச் சில்லறை என்றே பலரும் குறிக்கின்றனர். இதில் அறுக்கப்படுவது எதுவுமில்லை. புதுச்சொல்லாக்கம் இது. பழந்தமிழில் காணப்படாதது. பெரிய தொகையை வகுப்பதுண்டு. அதில் ஒன்றற்குக் கீழ்ப்பட்ட சிறு பிரிவுகள் பின்னம் எனப்படும். அரை, கால், அரைக்கால் என்பன பின்னங்கள். அதன்வழி வந்த புதுச்சொற் படைப்பாகிய சில்லரையைச் சில்லரை என்றே எழுதவேண்டும். சில்+அறை என்று சிலவாக அறுப்பதற்கு எதுவுமில்லை. முக்காலும் மற்றும் எக்காலும் சில்லரையே சரியான சொல்.

46. எண்ணெய்க்கடை

எண்ணெய் - எள் + நெய். வெண்ணெய் - வெண்மை + நெய். சுவரைச் 'சுவற்றில்' என்றே இன்றும் எழுதுவதுபோல, இவற்றையும் இன்றும் எண்ணைக்கடை, வெண்ணைய்க்கடை என்றே எழுதிவைக்கின்றனர். சிலர் இடையிலுள்ள ஒற்றெழுத்தை எடுத்துவிடுவர்; எண்ணெய் கடை என எழுதுவர்.

எண்ணெய் கடை, வெண்ணெய் கடை, மருந்து கடை - என்பதும் தவறு. இவை யாவும் கடையப்படுவன என்று கூறி, ஏவுவதுபோல் உளது. 'க்' ஒற்று இடையில் வந்தால்தான், கடை கடையாக இருக்கும்.

47. தலைக்கு ஒரு பங்கு

ஒவ்வொருவருக்கும் ஒரு பங்கு கொடுக்க வேண்டும் என்பதை, தலைக்கு ஒரு பங்கு என்பது தமிழ் வழக்கு. பழங்காலத்தில் 'தலைத்தலை' என்ற தொடர் இடந்தோறும் ஆள்தோறும் மேன்மேலும் எனும் பொருள்களில் வழங்கி வந்துளது. பங்காளிகளின் எண்ணிக்கை மிகுதியாக இருந்தால், 'தலைக்கட்டு மிகுதி' என்பர். 'தலைக்கு அறுபது ரூபாய் சம்பளம் தரலாம்' என்பர். தலை என்பதைப் பேச்சில் 'தலா' ஆக்கிவிட்டனர். 'தலா ஐந்து கூறு' என இவ்வாறு பெரும்பாலோர் கூறுகின்றனர். வடையை வடா என்றும் தோசையைத் தோசா என்றும் பிறமொழியினர் பேசக் கேட்ட தமிழன் 'தலைக்கு ஒரு புடைவை' என்பதைத் 'தலா ஒரு புடைவை' என ஆக்கிவிட்டான் போலும். தலா எனும் சொல் தமிழ்ப்பேரகராதியில் இல்லை.

தமிழில் வந்து வழங்கும் வடமொழி, உருதுச் சொற் பட்டியல்களிலும் காணப்படவில்லை. நல்லவேளை! தலைக்கு வந்தது 'தலா'வோடு போயிற்று. தலைக்கு என்பது சினையாகு பெயராய், மனிதர்களின் எண்ணிக்கையைக் குறிக்கும். இனிமேலேனும் தலாவை விட்டுத் தலையை நிமிர்த்தி வாழ்வோம்.

48. கயிறும் வயிறும்

வயிறு வலிக்காமலிருக்க உணவைப் பசி அளவைவிடக் குறைத்துண்ணவேண்டும். கருவுற்று இருப்பவளை 'வாயும் வயிறுமாக' இருக்கிறாள் என்பர். கயிறு என்பதும் அதுபோன்றதே. இவை பெருவழக்கு. இருந்தும் சிலர் வயறு, கயறு, வயத்தில், கிணத்துக் கயறு என்று தவறாகப் பேசியும் எழுதியும் வருகின்றனர். 'மணலைக் கயிறாகத் திரிக்க வல்லவன்' என்பது ஒரு பழமொழி.

இவை குற்றியலுகரங்களாதலால் மிகச்சிறிய அளவு குறுகி ஒலிக்கப்படுகின்றன. கல்வெட்டுக்களில் 'கயர்' எனக் காணப்படுகிறது. மலையாளத்தில் நம் பேச்சு வழக்கு வடிவமே - கயறு - வயறு - கயற், வயற் - அதாவது ஒலித்திரிபுற்ற வடிவமே உளது. தகழி எழுதிய ஞானபீடப் பரிசுபெற்ற புதினம் 'கயறு' என்ற பெயருடையது.

தேங்காய் நார் போன்றவற்றால் கயிறு திரிப்பதால், அது பிற நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் போது, அச் சொல்லும் அங்கு சென்றது. ஆங்கிலத்தில் காயிர் - coir என்றசொல், Coconut Fibre என இன்றும் காணப்படுகிறது. சங்கப் பாடல்கள் தொட்டுக்

காணப்படும் கயிறு, நம் சேரநாட்டு வழியாகக் கிரேக்கம், உரோமாபுரிக்கு எல்லாம் சென்று, ஆங்கிலத்தில் 'Coir' என ஏறியுள்ளது. இன்று கேரளத்திலும் தமிழகத்திலும் 'கயிற்றுவாரியம்' என்றால், தாழ்வு என்று கருதி, 'Coir Board' என்றே பெயரிட்டுப் பெருமிதமடைகின்றனர்!

49. முடமருத்துவ சாலை

கால் முடமானது. இளம்பிள்ள வாதத்தால் முடமான காலுடன் படித்து முன்னேறியவர் பண்டிதமணி மு.கதிரேசர். முடம்பட்டவன் முடவன் எனப்பட்டான் (குறு.60) முடங்குதல் - வளைதல். முடமோசியார் ஒரு சங்கப்புலவர். இன்று இதை நுடம்பட்டதாகக் கூறுவதும் நுட வைத்தியசாலை என எழுதி வைப்பதும் தவறு. முட மருத்துவ சாலை என எழுதித் தமிழ் முடம்படாவாறு காப்பது நல்லது. சிலர் முப்பது என்பதை நுப்பது என்றே உச்சரிப்பதும் வேதனை தருகிறது.

50. முப்பத்து இரண்டு, முப்பத்து மூன்று

சிலர் 'காசோலை'யில் எண்ணை எழுத்தால் எழுதும்பொழுது முப்பத்தி இரண்டு என எழுதுவது தவறு. முப்பத்திரண்டு என்று புணர்த்தோ, முப்பத்து இரண்டு எனப் பிரித்தோ எழுதவேண்டும். இருபத்து நான்கு, நாற்பத்து ஐந்து, அறுபத்தாறு அல்லது அறுபத்து ஆறு என எழுதுக. நாற்பத்தி ஐந்து இருபத்தி நான்கு என 'இகர' இறுதி ஒட்டுப் போடுவது தவறு. பேச்சில் தவறும் ஒலித்திரிபு அது. அறுநூற்று எழுபத்து ஏழு என எழுதவேண்டும்.

51. செயப்படுபொருள் பயன்பாடும் செயப்பாட்டுவினைப் பயன்பாடும்

இக்கட்டுரை யான் எழுதியது. இக் கட்டுரை என்னால் எழுதப்பட்டது. இவ் உணவுயான் சமைத்தது. இவ் உணவு என்னால் சமைக்கப்பட்டது. செயப்படு பொருள் வாக்கியமாக எழுதுவது ஆங்கிலத்தில் மிகுதி. தமிழில் எழுவாய் வாக்கியமாகவே எழுதுவது பெருவழக்கு.

கவிதை உருவானது. கட்டடம் எழும்பியது குறை நீங்கியது. இவ்வழியாகப் பேருந்து ஓடியது. தேர் நகர்ந்தது. இவை தாமே உருவாவதோ, ஓடுவதோ இல்லை. உருவாக்கப்படுவன; ஓட்டப்படுவன. செயப்படு பொருளைச் செய்தது போல, அதாவது அவையே எழுவாயாய் அவற்றை நடத்தியதுபோலத் தமிழில் கூறுவது ஒரு மரபு. தேர் நகர்த்தப்படுவது. அதைத் தேர் நகர்ந்தது என்பது தமிழ் மரபு (தொ. 731).

மக்கள் சத்தம் போடாதிருக்கக் கேட்டுக் கொள்கிறோம். பயணிகள் விரைந்து வண்டியிலேறுமாறு வேண்டுகிறோம். கூட்டம் நடைபெறாதென்று தெரிவிக்கிறோம். இவை செய்வினை வகைகள். இவற்றைச் செயப்பாட்டுவினை வடிவத்தில் கூறுவது இன்று பெருவழக்காகி விட்டது.

மக்கள் சத்தம் போடாதிருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பயணிகள் விரைந்து வண்டியிலேறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கூட்டம் நடைபெறாதென்று தெரிவித்துக் கொள்ளப் படுகிறது. இவை செயப்பாட்டுவினை வடிவங்கள்.

முன்பு செய்வினை வடிவங்களுக்கே சிறப்பிடம் இருந்தன. இன்று செயப்பாட்டுவினை வடிவங்கள், நாளேடுகளில் பெருவழக்குப் பெறுகின்றன.

கடைகள் சூறையாடப்பட்டன. கூட்டம் கலைக்கப்பட்டது. இந்திரா காந்தி சுடப்பட்டார். கடைகள் இடிக்கப்பட்டன. ஊராட்சித் தலைவர் கொலை செய்யப்பட்டார். யார் என்று தெரியாதபோதும், யாரென்று சுட்டிக்கூறக் கூடாதபோதும் இச்செயப்பாட்டு வினைவடிவம் உதவி செய்கிறது. 'பயணிகள் விரைந்து வண்டியில் ஏறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்' என்றால், சொல்பவர் பற்றி அக்கறை இல்லை; பயணிகளே அறியவேண்டியது இது. இற்றைத் தமிழ் இது.

52. அறிக்கை அறிவிக்கை

'அறி' - தன்வினை. அறிக்கை அறிவிப்பது. தானே ஒன்றை அறிவிப்பது; அரசு அறிவிப்பது எல்லாம் அறிக்கை. அரசின் செய்திக் குறிப்பு, இப்போது அடிக்கடி அறிவிக்கிறது. அரசு அறிக்கை விடுகிறது. ஆண்டறிக்கை (Report) படிப்பது ஒரு நிகழ்ச்சி நடைமுறை. அறிக்கைப் பலகையில் தகவல்கள் அறிவிக்கப்படும். அரசியல் கட்சிகள் 'தேர்தல் அறிக்கை' அச்சடித்து விடுவதில் தவறுவதில்லை.

Notice, Notification என்பன வேறுவகை. அவற்றை விளம்பரம் செய்யும்போது, 'அறிவிக்கை' என்று போடுகிறார்கள். 'அறிவி' - பிறவினை. ஒன்றன் மூலம் அல்லது ஒருவர் மூலம் அரசு அறிவிப்பது அறிவிக்கை ஆகிவிடும். இதழ்கள் மூலம் அறிவிப்பதும் அறிவிக்கை ஆகும். அறிக்கையில் அறிவிப்பவர் முக்கிய இடம்

பெறுகிறார். அவர் பொறுப்பு அது. அறிவிக்கையில், அறிவிக்கப்படுபவர் அதை அறிந்து செயற்பட வேண்டியவராகிறார். முக்கிய பொறுப்பு அறிவிக்கப் படுபவருக்குச் சேர்கிறது.

ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்ப்பதும், புதிய புதிய நடைமுறைகளும் பழஞ்சொல் வடிவங்களைப் பலவாறு புதிய வடிவங்களாக்குவதும் புதிய பொருள்களுக்குரிய பெயர்களை ஆக்குவதும் வாழும் மொழியின் வளர்ச்சிநிலைகளாகும்.

53. எனக்கு மகள், உனக்கு மகன்

கலைச்செல்வி எனக்கு மகள்; மாறன் எங்களுக்கு மகன். அவர் எனக்கு மாமா; அவர் என் மகளுக்கு அத்தை முறை. அவர்கள் எங்களுக்கு உறவு. அவன் எனக்கு அடுத்தவன்; தம்பி உனக்கு அவர் என்ன உறவு? தமிழுக்கு நீங்கள் உறவா? நான் அவருக்கு மனைவி என்பது உறவு; நான் அவரது மனைவி என்னும்போது அது 'உடைமை'யாகிறது. சமத்துவம் பேசுபவர்களைச் சிந்திக்க வைக்கும் தமிழர் நாகரிகச் சொல்லுருபு இது.

இன்று திருமண அழைப்புக்களில் 'எனது மகன் செல்வத்திற்கும், சேரனது மகள் செல்விக்கும் திருமணம்' என எழுதுகின்றனர். இது சரியா, தவறா என்பது பலரது ஐயம். எனது மகன் என்றால், 'அது' அஃறிணைப் பாற்படும் உருபுபோல் இருப்பதால், அதைத் தவிர்க்க வேண்டும் என்பர். 'என் மகன்' 'என் மகள்' என்றோ, 'எங்கள் மகள்' என்றோ உருபு விரிக்காமல் எழுதுவது நல்லதென்று பலர் கருதுகிறார்கள்.

இதிலுள்ள சிக்கல் என்ன? 'அது' என்பது அஃறிணையைச் சுட்டும் உருபுபோல் காணப்படுவதே அதற்குக் காரணம். பழங்காலத்துப் பாடல்களிலும் இன்றைய உலக வழக்கிலும் எனக்கு உறவு, அண்ணனுக்குத் தம்பி, அவர் வெண்ணிலாவுக்கு மாமன்மகன் முறை - இவ்வாறுதான் வருகின்றன.

'அது' என்பது ஆறாம் வேற்றுமை உருபு. 'உடைமை' அதன் பொருள். குரங்கினது ஆண் கடுவன் எனப்படும். எனது புத்தகம், எனது நாடு, எனது ஊர், எனது கை எனலாம்.

'மாநாய்கனுக்கு மகளாகிய கண்ணகிக்கும் மாசாத்துவானுக்கு மகனாகிய கோவலனுக்கும் திருமணம்' என்பது அன்றைய வாசகம். இன்று அழைப்பிதழில் 'எனக்கு மகளாகிய கலையரசிக்கும் நல்லப்பர்க்கு மகனாகிய கலைச்செல்வனுக்கும் திருமணம்' என எழுதும்பழக்கம் இல்லை.

'அது என்பது வேற்றுமை உருபு. ஆறாம் வேற்றுமையின் 'உடைமைப்' பொருளைச் சுட்டுவது. அதில் உயர்திணை அஃறிணை பார்க்க வேண்டியது இல்லை.

ஆனால் தமிழர்கள் மிக முதிர்ந்த நாகரிக மரபினர். எனது மகள் என்பது 'உடைமைப்' பொருள் தரும்; எனக்கு மகள் என்பதே உறவுப் பொருள்தரும். இங்கே உடைமையாக இருந்தாலும் அதை மாற்றி, உறவாக ஆக்குவதே உயர்திணைக்கு ஏற்றது. மனைவியை உடைமை என்பதும் மகனை உடைமையாக்குவதும் சமத்துவமாகுமா? உறவும் உரிமையும் தரும் நான்காம்

வேற்றுமை உருபாகிய 'கு'வாக அதை மாற்றுக என்றார் தொல்காப்பியர். 'அது' என் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின், அது என் உருபுகெடக்குகரம் வருமே' (578) என்றார் அவர். 'என் மனைவி' எனத் தொகையாகச் சொன்னதை, விரிக்கும்போது எனது மனைவி என்றே வருமாயினும், உயர்திணையாகலின் அதை நீக்கிவிட்டு, 'கு'கர உருபைச் சேர்க்கவும் என்பது பொருள். உரையாசிரியர்கள் உயர்திணையில் அவ்வாறு அது என விரிப்பது வழு என்றே விளக்கியுள்ளனர். அதாவது உயர்திணையை, உடைமைப் பொருளில் கூறுவதைவிட, உறவுப் பொருளிலும் உரிமைப் பொருளிலும் கூறுவதே சிறப்பு எனும் நுட்பமும் அதில் உளது.

ஆறுமுகநாவலர், 'அது' உருபு இடைக் காலத்திலும் பிற்காலத்திலும் உயர்திணை ஒருமை பன்மைகட்கும் வந்துள்ளதை, உதாரணங்கள் காட்டி விளக்குகிறார். நன்னூல் விளக்கவுரையில் அவர், 'அரனது தோழன்' (சிவனது தோழன்); 'குன்றவர் தமதுசெல்வர்', 'நினது அடியாரொடு அல்லால்' எனக் காட்டி, உயர்திணையில் வருவதில் குற்றமில்லை என்று கூறியுள்ளார். அவர் கருத்துப்படி 'எனது மகள்' 'எனது மனைவி' என்பதில் தவறில்லைதான். ஆனாலும் உறவை வலியுறுத்தும்படி என் மகன் என உருபு விரிக்காமலோ, 'எனக்கு மகனாகிய முருகனுக்கும்' என்றோ எழுத முயல்வதே நல்லது. எனது நூல், எனது நூல்கள், எனது இல்லம், எனது வீடுகள், பறவையது கூடு எனக் கூறலாம். என் மகன், என் மகள், என் மனைவி, என்தாய் அல்லது எனக்கு உறவுடையவர்கள் இவர்கள் எனக் கூறலும் எழுதுதலுமே செவ்விதாகும்.

உடைமையாக்குவதைவிட உறவாகவும் உரிமையாகவும் ஆக்குவதே சிறப்பு எனும் நுட்பம் உணரப்படவேண்டும்.

54. ஆகிய

ஆகிய எனும் சொல் முன்பு பயன்பட்ட விதம் வேறு; இன்று பயன்படுகிற முறை வேறு. முன்பு 'ஆகிய' என்றால், உண்டாகிய, அதுவாகிய, மாற்றமாகிய என்று பொருள். கோளம் ஆகிய பூமி; அன்னியன் ஆகிய வெள்ளையன் என வருவன பழைய முறை. 'உயிர் முதல் ஆகிய மொழியும்' (தொல். 144); 'இலர் பலர் ஆகிய காரணம்' (குறள் 270); 'கொடியன் ஆகிய குன்றுகெழுநாடன்' (குறு. 252) என்றுவரும். ஒன்று ஆகும் நிலை அது. ஆக்கப்பொருள் அடிப்படை எனலாம்.

இடைக்காலத்தில் உரையாசிரியர்கள் பண்புத் தொகை இடையுருபாகக் காட்டினர். செந்தாமரை - செம்மை ஆகிய தாமரை. கருங்குதிரை - கருமை + குதிரை. நிறமும் பொருளும் பிரிக்க முடியாதன. இதுவே அது; அதுவே இது. பனைமரம், சாரைப் பாம்பு - இவற்றிலும் 'ஆகிய' என்னும் இடையுருபு சேர்ப்பர். பனை ஆகிய மரம். சாரை ஆகிய பாம்பு. இரண்டும் ஒன்றே. முன்னது சிறப்புப் பெயர். பின்னது பொதுப் பெயர். பனை - சிறப்புப் பெயர். மரம் - பொதுப்பெயர். இவை 'இருபெயரொட்டு' எனப்படும்.

ஆங்கிலமொழி நடைப் பழக்கத்திற்குப் பிறகு 'ஆகிய' என்பது, ஒருவகை எண்ணிடை ஒட்டுருபாகப் பயன்படுகிறது. மா பலா வாழை ஆகிய மூன்றும் முக்கனிகள்; இயல் இசை நாடகம் ஆகிய மூன்றும்

முத்தமிழ். மெய் வாய் கண் மூக்கு செவி ஆகிய ஐந்தும் ஐம்பொறிகள் எனப்படும். இத்தனை என நன்கு அறிந்த அத்தனையும் கூறி, 'ஆகிய' சேர்க்க வேண்டும். தொல்காப்பியர் அ இ உ எ ஒ என்னும் ஐந்தும் குற்றெழுத்து என்று கூறுகிறார். இப்பொழுது இருந்தால் ஆகிய ஐந்தும் என்றே எழுதியிருப்பார். 'பதி பசு பாசம்' (இறை உயிர் கட்டு) ஆகிய முப்பொருள் உண்மை பகர்வது சிவனியம். (என்ற மூன்றும் எனும் மூன்றும் எனவும் சொல்லலாம்.) வரையறை தெரிந்து எண்ணி, முடிக்கத் தக்கவற்றுக்கே, அவ்வாறு முடிக்கும்போது 'ஆகிய' சேர்க்க வேண்டும்.

இங்கு 'முதலிய' வந்துவிட்டால், மேலும் சில உள என்றாகிவிடும்.

55. முதலிய

முதலிய - முதலாவதாகக் கொண்ட எனும் பொருளிலேயே இது முன்பு வழங்கியது. 'வல்லெழுத்து முதலிய வேற்றுமை உருபிற்கு' (தொல். 114) என்றால், வல்லெழுத்தை முதல் எழுத்தாகக் கொண்ட வேற்றுமை உருபு (கு, கண்) என்று பொருள்.

'நீலன் முதலிய கஞ்சுக மாக்கள்' (சிலம்பு 28.80); 'சுவை முதலிய புலன்களை நுகரும்' (மணி. 27-196). இங்கு முதலாகக் கொண்டு எண்ணும் பொருள் வந்துவிட்டது. சுவை முதலிய புலன்கள் என்றால் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் புலன்கள் ஐந்தும் என்று பொருள்.

முதலாவதாகக் கொண்ட என்பதிலிருந்தே முதலான, முதலிய எனும் சொற்பொருள் வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. ஒவ்வொரு சொல்லுக்கும் சொல், பொருள் வளர்ச்சி பற்றிய வரலாறு உண்டு. தமிழ்நாட்டில் மதுரை, திருச்சி கோவை முதலிய நகரங்கள் உள. தினை வரகு முதலிய புன்செய்ப் பயிர்கள் எனலாம். ஒன்றை மட்டும் சுட்டிச் சொல்வதானால் கரும்பு முதலாய பணப்பயிர்கள் எனலாம். ஆங்கிலத்தில் etc. என்பது etcetra என்பதன் சுருக்கம். பொருள் And so on, And others என்பது. ஆங்கில மரபுப்படி ஒன்றே போல்வனவற்றை, ஒன்றற்கு மேற்பட்டவற்றைக் கூறியே 'முதலிய' சேர்ப்பர். தமிழில் வந்த இம்மரபில், பழைய வேரும் உளது; இன்றைய புதிய விழுதும் உளது. இத்தகைய வழக்கு, மரபு முதலியனவே வளர்தமிழாகின்றன.

56. என், என, என்னும் அடிச்சொற்கள்

'தேன் என் கிளவி' *(340)*, 'தமிழ் என் கிளவி' *(385)* எனத் தொல்காப்பியம் குறிப்பிடும். ஒன்றைச் சுட்டிக்கூறி விளக்குவது இது. இதையே தேன் என்னும் சொல், தேன் என்ற சொல், தேன் எனப்படும் சொல் என்று மேன்மேலும் எளிமைப்படுத்துவர். 'என்' என்பது அடிச்சொல். சுருக்கமாகச்சொல்ல அது பயன்பட்டது. திருவள்ளுவர் 'குணம் என்னும் குன்று' *(29)*; 'கற்பு என்னும் திண்மை, *(54)* என எளிமைப்படுத்துவார். 'என்' பெயரெச்சமாக முடிகிறது; என வினையெச்சமாகிறது. எனச் சொன்னார்; எனக் கேள்விப்பட்டோம். 'என்னும்' என்பது 'எனும்' என,

இடைக்குறையாகச் சுருங்கும். 'என் நோற்றான்கொல் எனும் சொல்' *(70)*; 'இன்னான் எனப்படும் சொல்' *(433)* என்பன மிக எளிமை நோக்கியன.

எனக் கூறினார், என முடிவு செய்தனர் - இவ்வாறு வினையெச்ச வடிவில் இயைபிடைச் சொல்லாக என பயன்படுகிறது. 'உறழ் என மொழிப' *(368)*; விண் என வரூஉம் காயப்பெயர்' *(305)* என வினையெச்சமாகப் பல இடங்களில் இது தொல்காப்பியத்தில் ஆளப்படுகிறது. 'என என் எச்சம் வினையொடு முடிமே' *(921)* என விதியும் கூறுவார் அவர். தெய்வச்சிலையார் வினையொடும் முடிமே என்று பாடங்கொண்டு, பெயரொடும் முடிதலும் உண்டு என்றார். திருவள்ளுவர் 'அழுக்காறு என ஒருபாவி' *(168)* நாள் என ஒன்றுபோல் காட்டி' *(334)* எனப்படும் என்ற பொருளில் பெயரெச்சமாகவும் ஆள்கிறார்.

57. எண்ணிடைச் சொற்கள்

'என' என்பது எண்ணிடைச் சொல்லாகவும் பயன்பட்டுள்ளது. ஒன்றென, இரண்டென, மூன்றென என எண்ணுவர். மாடென, ஆடென, மானென என எண்ணுதல் உண்டு.

என, எனா, என்று, என்றா, என்ற சொற்கள் எண்ணுதற்குப் பயன்பட்டன.

வினையே, குறிப்பே, இசையே, பண்பே என்று தொல்காப்பியர் ஏகாரம் போட்டு எண்ணினார் *(743)*. 'ஒன்றே, வேறே என்றிரு பால்வயின்' *(1039)* என அவரே எண்ணுவார். அவர் 'நிலனும் பொருளும் காலமும்

கருவியும்' (719) என, இன்றைக்குப் போல. 'உம்' போட்டும் எண்ணினார். காயும் கனியும் கிழங்கும் வேரும் என எண்ணுவது பெருவழக்கல்லவா?

கேட்டை என்றா, நின்றை என்றா, காத்தை என்றா, கண்டை என்றா (909) என 'என்றா' போட்டும் எண்ணுகிறார். இவற்றைப் படிக்க வியப்பாக இருக்கும். தெரிந்துகொள்வது பிழையற எழுத உதவும்; மொழிப் பழக்கம் உண்டாகும்; பழைய இலக்கியங்களைப் படித்தறியவும் உதவுமல்லவா?

'மறம் மானம் மாண்டவழிச்செலவு தேற்றம் என நான்கே ஏமம் படைக்கு' (760) என்று திருக்குறள் எண்ணுகிறது. இதை மறம் என, மானம் என, மாண்ட வழிச்செலவு என, தேற்றம் என - என்று தனித்தனியே எண்ணவேண்டும். இவை புதுமையாகப் படும். ஆனாலும் இவை நம்பேச்சில் இன்றும் உள்ளன. 'நமக்கு வீடுன்னு, வாசல்னு, கூடம்னு, குடிசையினு என்ன இருக்கு?' என்று புலம்பும் மனைவி, வீடு என வாசல்என என்பதைத்தான் அப்படி அழுத்திச் சொல்கிறாள். 'நகையினு நட்டுனு, தோப்புனு துரவுனு, சொத்துனு சுகமுனு எதுவுமில்லையே' என எண்ணி ஏங்கும்போது என என்பதே திரிவுபட்டு வழங்குகிறது என உணரலாம்.

58. என்னும், என்ற, என்கிற

பாபு என்ற மணியைக் காணவில்லை. இன்பம் என்னும் பூங்கொடிக்குத் திருமணம். பழனியப்பன் என்ற குமரனுக்கு என்பதை பழனியப்பன் (எ) குமரனுக்கு

எனப் போடுவர். இருபெயர் வழக்கில் இதுபோல் காணப்படும்.

சிலர் என்ற என்பது இறந்த காலத்தையும், என்கிற என்பது நிகழ்காலத்தையும் என்னும் என்பது எதிர்காலத்தையும் குறிக்கும் என்பர். கரிகாலன் என்ற திருமாவளவன் எனல் வேண்டுமாம். பாபு என்னும் மணி என இப்போதிருப்பவரைக் குறிக்க வேண்டுமாம். 'என்கிற' என்னும் நிகழ்கால வடிவமொன்று இன்று பெருவழக்காகிவிட்டது. மேலும் என்கிறான், என்கின்றான் எனப் பேச்சு வழக்கில் வருவன பலவுள.

ஆயினும் 'என்ற, என்னும்' ஆகியன குறிப்புப் பெயரெச்ச வடிவான இணைப்பிடை உருபுச்சொற்களே. இவற்றில் தொல்காப்பியரே காலவேறுபாடு காட்டவில்லை. 'ஆய்தம் என்ற முப்பாற்புள்ளி' *(2)*; 'அ...ஔ என்னும் அப்பால் ஐந்தும் (3)* என அவர் அடுத்தடுத்து ஆள்வது காணலாம்.

''முத்துராமலிங்கம் *(21)* என்ற தொழிலாளி', 'மன்னாருக்குத் தெற்கே முருங்கன் என்ற இடத்தில்', '*4-2* என்ற கோல் கணக்கில்' *(தினமணி 26-8-'88)*

இவ்வாறு எனப்படும் எனும் பொதுப்பொருளிலேயே இது வழங்குவதைப் பார்க்கிறோம்.

தொலைக் காட்சியில் 'செல்வி என்னும் ஆறு வயதுச் சிறுமியைக் காணவில்லை', 'கந்தசாமி என்ற 23 வயது இளைஞர் பத்து நாளாகக் காணப்படவில்லை'. தொலைக்காட்சியில் இவ்வாறு எவ்வித வேறுபாடுமின்றி, இவை பயன்படுத்தப்படுகின்றன.

59. என்று, என்ற

என்று என்பது வினையெச்சமாகவும் என்ற என்பது பெயரெச்சமாகவும் அன்றும் இன்றும் வழங்கிவருகின்றன 'என்று கூறு' (நற். 79), 'என்று இகழ்ந்தனன்' (குறு. 43) வினையெச்சம்.

'என்ற தப்பற்கு' (குறு.79), 'அஞ்சல் என்ற இறை' (நற்.43), பெயரெச்சம்.

தலைமை அமைச்சர் தேசியமொழிகள் அனைத்தும் சமமாக மதிக்கப்படவேண்டும் **என்று** ஆணையிட்டார். தமிழக அரசு தமிழ்வழிக் கல்வியைக் கைவிடும் **என்ற** செய்தி கேட்டுத் தமிழினம் அருவருப்படைந்தது. முன்னது வினையெச்சம், பின்னது பெயரெச்சமாதல் காண்க.

60. என்பது, என்பவர்

இவையும் சுட்டிச் சொல்லி விளக்க வருவனவே. 'முளவுமா என்பது முள்ளம் பன்றி'.

என்பது, என்பன, என்பவன், என்பவள், என்பவர் என இருதிணை ஐம்பால் வேறுபாட்டுடன் இதைக் கூறலாம்.

தெரியாத ஒன்றைத் தெரியப்படுத்தும்போது இது பயன்படும். பலர் அறியாத ஒன்றை, பிறர் அறிந்திராததை விளக்கும்போது இது தேவைப்படும். 'பழ. நெடுமாறன் **என்பவர்** தமிழின ஒற்றுமைக்குப் பாடுபட்ட மாவீரர்' எனக் கூறக்கூடாது. அவர் உலகத்தமிழரால் நன்கு அறியப்பட்டவர். தமிழகப் பெருவிழாவைக் கொண்டாடிய

பெருமை நா. அருணாசலம் **என்பவருக்கே** உண்டு. என்பவர் என்பது தவறு. தமிழகம் அறிந்த உண்மை அது.

காந்தியடிகள் என்பவர் என்று தொடங்கக் கூடாது. தமிழ்நாடு என்பது நம் மாநிலம் என்பதும் தவறு. தமிழ்நாடு நமது மாநிலம் எனல் வேண்டும். இவை அனைவரும் அறிந்தவை.

பலராமன் என்பவனைக் காவலர் பிடித்தனர் எனலாம். அவனை யாருக்கும் தெரியாது. குயில் என்பது கருமைநிறம் உடையது. மரை ஆ என்பது காட்டுப்பசு. குறத்தி என்பவள் குறிஞ்சி நிலத்தவள். மகிழ்நன் என்பவன் மருதநிலத் தலைவன். மல்லர் என்பவர் தோள்வலிமிக்கவர். அறியாதவற்றை அறிவிக்க இவை பயன்படுகின்றன.

61. ஓர், ஒரு

எதிரே உயிர் முதன்மொழி வந்தால் 'ஓர்' என்று போட வேண்டும். மெய் (உயிர்மெய்) முதன்மொழி வந்தால் 'ஒரு' என்றே **அடைமொழி** போடவேண்டும்.

ஓர் + அறிவுயிர்	ஓர் + உடல்	ஓர் + இரவு
ஓர் + உலகம்	ஓர் + இடம்	ஓர் + இனம்
ஒரு + பகல்	ஒரு + முறை	ஒரு + சொல்
ஒரு + நூல்	ஒரு + கணம்	ஒரு + தாய்

ஆங்கிலத்தில் An, A என்பன பயன்படுவதை ஒப்பிட்டால் வியப்பாக இருக்கும். உயிர் முதன்மொழிக்கு An வரும்; மெய் முதன்மொழிக்கு A வரும். An Elephant, A Dog என்றுதானே சொல்வர்? தமிழிலும் பேச்சிலும் எழுத்திலும் இது மாறக் கூடாது.

ஓர் - ஒப்பற்ற, பிறிதொன்றில்லாத என்றும் பொருள்படுவதால், அவ்வாறு பொருள்தருமிடத்தில் மட்டும் ஓர்நாள் (ஒப்பற்றதொரு பெருநாள்) எனவரும். திருக்குறளில் பெருநோய் எனும் பொருளில் 'ஓர்நோய்' (*429, 848*) என வருமிடம் உண்டு. 'அதிர வருவதோர் நோய்' என்பது செய்யுள் வடிவத்தில், முன்சீருடன் இணைந்து வருவது. இப்புறநடைகள் செய்யுள் வடிவம் பற்றியும், பொருள் வேறுபாட்டாலும் வருவன.

ஓர் இயல்பான இதனை ஒருபோதும் மாற்றக் கூடாது. உயிர் முதன்மொழிக்கு அஃது என்பதும் மெய் முதன்மொழிக்கு அது என்பதும் அடைமொழியாக வரும். இதுவும் ஓர், ஒரு போன்றது. அஃது ஓர் உயிரினம், அது தமிழ்ப் பாடம் என வரும்.

ஆருயிரும் அருஞ்செல்வமும்

உயிர் முதன்மொழி எதிரே வந்தால் ஆர் என்றும் உயிர்மெய் முதன்மொழி வந்தால் அரும் என்றும் அடைமொழி சேர்ப்பது, நம் பேச்சுவழக்கிலும் இயல்பாக இருக்கிறது.

தமிழில் தனிமெய் மொழிமுதலில் வராது. க்ரியா தமிழன்று; ப்ரியா தமிழன்று; ஸ்ருதி தமிழன்று. கிரியா, பிரியா, சுருதி என இவை எழுதப்படும். பகல் என்பதன் முதல் எழுத்து எது? 'ப' உயிர்மெய் எழுத்து. அதைப் பிரித்தால் ப் + அ எனல் வேண்டும். இப்போது மெய்யே, பகலில் முதல் எழுத்து. ஆனாலும் தமிழில் தனிமெய் மொழிமுதலில் வாராது. அதனால் வருமொழியை மெய் முதன்மொழி என்றும் உயிர்மெய் முதலாக வரும் மொழி என்றும் சொல்வன இரண்டும் ஒன்றே.

ஆருயிரே என்று அழைத்து, அரும்பொருளே, அருஞ்செல்வமே என்றுதான் கொஞ்சுகிறோம். ஆர் பொருளே, ஆர் செல்வமே என வருமா? ஆர், அரு, அரிய என்று வரும். ஆருயிர், அரும்பொருள், அரிய செல்வம் என்பர். இவற்றுள் ஆர், உயிர்முதன் மொழிக்கு மட்டுமே வருவதை அறிக.

ஆரிடர் - அரும்பொருள் - அரியபொருள்
ஆரஞர் - அருஞ்செல்வம் - அரியசெல்வம்

உயிர்வரின் ஆர் மட்டுமே வருகிறது. மெய் வரின் அரும், அரிய என வருகின்றன. தொல்காப்பியர் ஒரு ஓர், இரு ஈர் என முதல் இரண்டு எண்களுக்கு மட்டுமே இவற்றைக் கூறியுள்ளார்.

பேர், பெரு, பெரிய; கார் கரு கரிய என்பனவற்றை ஒப்பிடுக.

பேர் - பெரு ஒப்பிடுக

பேராசிரியர்	-	பெரும்பொருள்
பேராதரவு	-	பெருங்கடல்
பேருலகம்	-	பெருந்துணை
பேரிடர்	-	பெருவழித்துறை
பேரின்பம்	-	பெருஞ்செல்வம்
கார்முகில்	-	கருமுகில் - கரியமுகில்

இவ்வாறு எத்தனை சொற்களை எண்ணிப் பார்த்தாலும் உயிர் முதன் மொழிக்குப் 'பேர்' அடையும், மெய் முதன் மொழிக்குப் 'பெரும்' அடையுமே வருகின்றன.

ஓருடல் ஈருயிர், பேரணி, சீரணி, கூர் உகிர் என இவ்வாறு உயிர்முதன் மொழிகளின் அடைமொழிகள் ஒருதன்மையாய் வருவன பலவுள. ஓராயிரம், ஈராயிரம் என்பர். மொழியுடன் பழகப் பழக இவை தாமே நினைவுக்கு வரும். கற்க - கசடுஅற - கற்பவை கற்க ! பிழையற்ற நூல்களைக் கற்றால், பிழையற்ற தமிழ் தானே வரும். திரு.வி.கவும் மு.வ.வும் வ.சுப.மாவும் மறைமலை அடிகளும் பாவாணரும் எழுதிய நூல்களைப் படித்துவிட்டுப் பிற நூல்களைப் படியுங்கள். பிழைநேராது, பிறர் பிழை செய்யுமிடம் புலப்படும். நீங்கள் திருத்தமாக எழுத இது வழிகாட்டும்.

62 . அஃது, இஃது

ஒரு ஓர், இரு ஈர் போல, எதிரே வருவது உயிர் எழுத்தானால் அஃது, இஃது என்ற அடைமொழிகளும் மெய் எழுத்தானால் அது, இது என்ற அடைமொழிகளும் வரும்.

ஆய்த எழுத்து வல்லெழுத்தின் வல்லோசையை மென்மைப் படுத்த வந்த ஓர் எழுத்தே ஆகும். அது ஆங்கிலத்தில் Athu ஆக ஒலிக்கும்; அஃது Adhu ஆக ஒலிக்கும். இக்காலத்தில் இஃது ஓரளவே பயன்படுத்தப்படுகிறது. பெரிதும் அல்வழித் தொடரில், அடைமொழியாக வரும்பொழுது, அஃதும் இஃதும் வருமென்பது இலக்கணம்.

அஃது ஓர் நாடு, இஃது ஒரு வீடு; இஃதோர் உயிர்; இஃது இனிது.

எஃகு, கஃசு என இது மிகச் சில சொற்களிலேயே வழங்கியுள்ளது. மென்மையிலும் வன்மை

உண்டுதானே? எஃகு போல இரும்பு நெஞ்சம் வேண்டும். அடைமொழி அல்லாதபோது, இவை (அது, அஃது) மாறியும் வழங்குகின்றன.

63. ஆகும் ஆவர் ஆவார்

பாடம் படிக்கும்போது வாசிப்பது நல்ல பழக்கம் ஆகும்; அதைவிட எழுதிப் படிப்பது இன்னும் நல்லது ஆகும். தமிழிசை இனியது ஆகும். தமிழ் மொழி எளியதாகும்.

முன்னைய தமிழ் ஆசிரியர் பலர் பேரறிஞர்கள் ஆவர். மொழியியற் புலவர்கள் அறிவியல் அறிஞர்கள் ஆவர். சீனர்கள் தாய்மொழிப் படிப்பில் பேரார்வம் உடையவர்கள் ஆவர்.

காமராசர் நம் பெருந்தலைவர் ஆவார். அறிஞர் அண்ணா பேரறிஞர் ஆவார். தந்தை பெரியார் மிகப் பெரிய புரட்சியாளர் ஆவார். காந்தியடிகள் இந்திய நாட்டின் தவமகன் ஆவார். இவை சில நடைமரபுகள். சிலப்பதிகாரத்தை எழுதியது இளங்கோவடிகள் ஆகும் என்பது தவறு. சிலப்பதிகாரத்தை எழுதியவர் இளங்கோவடிகள் ஆகும் என்பதும் தவறு. சிலப்பதிகாரத்தை எழுதியவர் இளங்கோவடிகள் ஆவார் என்பதே சரியானது ஆகும். பெரியபுராணத்தை எழுதியவர் சேக்கிழார் ஆவார். தமிழ்வழி உயர்கல்விக்குக் குரல்கொடுத்த, நம் காலத்து ஒரே ஒரு கல்வியாளர் வ.அய்.சுப்பிரமணியம் ஆவார்.

உயர்திணைப் படர்க்கைப் பன்மையில் 'ஆவர்' வருவது பெருவழக்கு. முற்போக்கு எழுத்தாளர்கள்

மொழிச் செப்பத்திலும் அக்கறை காட்டுபவர் ஆவர். இ.ஆ.ப. படித்துப் பணிக்குவந்த செருக்கால் தமிழை அவமதிக்கும் அதிகாரிகள் தமிழகத்தில் மட்டுமே பெரும்பான்மையர் ஆவர்.

உயர்திணைப் படர்க்கை மதிப்புப் பன்மையில் 'ஆவார்' வருவது பெருவழக்கு ஆகும். புத்தர்பெருமான் கொலை வேள்வியைத் தடுத்த பேரருளாளர் ஆவார். வள்ளலார் சிற்றுயிர்களையும் தமதுயிர் போல மதித்த, ஆன்மநேய அருளாளர் ஆவார்.

64. இராசராசன், இராசேந்திரன்

அரசு எனும் தமிழ்ச் சொல்லே, வடமொழியில் ராஜாவாகியுளது. அரசுதான் 'ராசு' என மாறும். இதற்கு 'உயிர் இடம் பெயர்தல்' என்பது மொழியியல் விளக்கம். ராசு, அரசு என ஆக 'விதி' இல்லை. நகரத்தார் மரபில் 'அரசு' எனும் பெயரை 'ராசு' 'ராசாச்சி' எனப் பேச்சில் மருவி வழங்குவர். என் ராசா, ராசாத்தி மக்களிடையே மிகுதிப்பட்ட ஒரு வழக்காறு. சூடு ஜூடு ஆவது போல, ராசு ராஜூ ஆனது.

இலது - லேது எனத் தெலுங்கில் மாறும். முன் உள்ள 'இ' உயிர் 'ல'வுடன் சேரும்போது, அது திரிந்து 'லேது' ஆகும். அதுபோல அரசுவில் உள்ள 'அ', ரவுடன் சேர்ந்து ராசு ஆகின்றது.

சிலர் விளங்காமல் ராஜா என்பதிலிருந்துதான் அரசு வந்ததென்பர். அவர்கள் 'நீர்' - நீரம் என்ற வடசொல்லின் திரிபு. மீன் - மீனம் எனும் வடசொல்லின் திரிபு என்றெல்லாம் கதைப்பவர்கள். சிங்கப்பூர்

வானொலியில் பணியாற்றிய மெ. திருநாவுக்கரசு, அங்கு நல்ல தமிழ் - தூயதமிழ் நாள் முழுதும் - அல்லும் பகலும் ஒலிக்க வழிசெய்தவர். பெருந்தமிழ் வல்லுநர். அவரது வழிவழி மரபிலேயே இன்றும் அங்கு தமிழ் முழங்குகிறது. ஒருமுறை, 'என் பெயரில் உள்ள அரசு' (திருநாவுக்கரசு) என்பதே தமிழில்லை என்று கூறுகிறார்களே என வினவினார்.

அப்போது இவ்விளக்கம் 'தமிழ் அரசு' எனும் தலைப்பில் எழுதப்பட்டது.

ராசு, ராஜு ஆகி ராஜா வாகிவிட்டது. பூசு, பூசை, பூசனை - பூஜை ஆன கதையும் இதுதான். அரசன் என்பது அரையன் எனவும் எழுத்துப்போலியாகத் தமிழில் வழங்கும். முத்தரையர் தமிழக அரச குடிகளுள் ஒரு பிரிவினர்.

அரசன், அரசி, அரசர், அரசவை, அரசியல், அரசு போலும் சொற்கள் சங்கப் பாடல்களில் பரக்கக் காணப்படும். எதையும் வடமொழியிலிருந்து வந்தது என்று காட்டவே முயலும் ஒரு பழக்கம் இங்கு, பெருநோயாகப் பரவிக் கிடந்தது.

அரசு - அரைசு எனவும் மாறும். 'அரைசர்' (நற்.291). அரைசு (புறம் 26).

திராவிடமொழிகளில் அனைத்திலும் வழங்கும் சொல், தோடா மொழியில் அரசு - அர்சு (அர்ஸ்) ஆகிறது. 'அர்ஸ்' எனவே ஓரினத்தார் குறிக்கப்பட்டு, அது பின்னொட்டாகும் பெயர்கள் உள. கன்னடத்தில் 'அரசாத்தி' என்றே அரசி அழைக்கப்படுகின்றாள். இதுவே ராஜன் என வடமொழியில் ஏறிற்று என்பதே

'வேர்ச்சொல்' அகரமுதலி அறிஞர்கள் எமனோ பரோ கருத்துமாகும்.

அரையன் எனும் மருவிய வழக்கே, ராயன் என ஆனது. அது பிறகு ராய், ராவ் என்றெல்லாம் திராவிட மொழிகளில் மருவியது.

எனவே இராசராசன் - அரசர்க்கரசன். பல்வர்க்குப் பிறகுவந்த இடைக்காலச் சோழர்கள், வடமொழி வழக்கைத் தள்ள முடியாத அளவு அது பரவிக்கிடந்தது. அரத்தம் - ரத்தமாகி - இரத்தமான கதை இது. இரவுதான் ராவு என மருவும். அரசுதான் ராஜாவானது என்பதற்கு ஐயமில்லை. எனவே இராசராசன், இராசேந்திரன் என்றே எழுதுவோமாக.

65. உலகம்

உலகம் என்பதே, உயிர் இடம் பெயர்ந்து லோகம் ஆனது. லோகம் - உலோகமாகக் கூடும்; உலகமாதல் எத்துணையும் இயலாது. உலகம் - லோகமானதால் லோகாம்பாள், லோக நாயகி, லோககுரு ஆகுதல் எளிதானது. அது 'லோக்' சபாவும் ஆனது. தமிழில் உலகம்மை, உலகநாயகி, உலககுரு ஆதலே சீர்மையுள்ளது. 'காலம் உலகம் உயிரே உடம்பே' எனத் தொடங்கும் கிளவியாக்க நூற்பாவுக்கு உரை எழுதிய பாரத்துவாசி நச்சினார்க்கினியர், 'காலம், உலகம் என்பன வடசொல் அன்று, ஆசிரியர் வடசொற்களை எடுத்தோதி இலக்கணம் கூறாராகலின்', என்று குறிப்பிடுவதும் காணலாம். (தொல். 541)

66. கடைப் பிடிக்கவேண்டும்

பேருந்து ஓட்டுநர் கண்ணெதிரே, பேருந்து ஒன்றில் 'சாலை விதிகளைக் கடை பிடிக்க வேண்டும்' என்று இருந்தது. மேலும் பல இடங்களில் இதைக் காண நேர்ந்தபோது, 'இவர்கள் ஏன் கடையைப் பிடிக்கிறார்கள், கடைப்பிடிக்கக் கூடாதா' என்று தோன்றியது. கடை பிடிப்பது வேறு; கடைப்பிடிப்பது வேறு அல்லவா? கடைப் பிடிக்க முடியாததால், இவர்கள் கடை பிடிக்கிறார்களா என்ற ஐயம் கூட எழுந்தது. ஒரு 'ப்' எழுத்து மிச்சம் பார்க்கக் கூடாது. பொருள் வேறுபடுவதை உணர வேண்டும். தமிழின் மொழி இயல்பை அறிந்து, அதற்கு ஏற்ப வழக்காற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

தமிழைப் பிழையின்றி எழுத வேண்டும் என்ற கட்டுப்பாட்டைப் பலர் கடைப்பிடிப்பதே இல்லை. ஆங்கிலத்திற்போலப் பக்கத்தில் அகரமுதலி வைத்திருக்க வேண்டும். ஐயம் வரும்போது அதைப் பார்த்துப் படிப்பது, எழுதுவது என்ற பழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆனால் நம்பும்படியான செவ்விய அகரமுதலி ஒன்று தமிழில் இனிமேல்தான் வரவேண்டும்.

67. தொந்துரவு

தொந்துரவு எனும் சொல்தான் தொந்தரவு, தொந்திரவு என்றெல்லாம் திரிக்கப்படுகிறது. நல்குரவு, துப்புரவு, தாக்குரவு போல, 'உரவு' இறுதி ஒட்டுப் பெற்றுத் 'தொந்தம்' - தொந்துரவு ஆகியுளது. தொந்தம்

எனும் சொல், 'உரவு' என்ற தொழிற்பெயர் ஒட்டைப் பெற்று வழங்குகிறது. தொந்தம் - தொடர்பு, உறவு. சொந்த பந்தம் போலத் தொந்தமும் உறவுத்தொடர்பைக் குறிக்கிறது. இருந்தாலும் முன்வினைத் தொடர்பையே சிறப்பாகக் குறிக்கிறது. அப்பர் தேவாரத்தில் 'தொல்லை வல்வினைத் தொந்தம்தான் என்செய்யும்' என இது ஆளப்படுகிறது. முற்பிறவியில் நாம் செய்த 'முன்வினைத் தொந்தம்' (தொடர்பு) இப்பிறவியில் வந்து சார்வது இவ்வாறு குறிக்கப்படுகிறது. திருப்புகழில் இது 'தொந்தரை' (623) என வழங்குகிறது. இன்று தொந்துரவு, தொந்தரவு, தொந்தரை எனும் சொல் வடிவங்கள், உறவினரால், பக்கத்திலிருப்பவரால், நாய் பூனை எலிகளால் ஏற்படும் சிறுசிறு இன்னல்களைக் குறிக்கிறது.

திராவிட மொழிகளில் அனைத்திலும் காணப்படும் இச்சொல்வடிவத் திரிபுகள் பல. தொந்தரவு, தொந்தரை, தொந்தரி (தமிழ்); தொந்தரம் (மலை) தொந்தாரே (கன்.); தொந்தரே (துளு); தொந்தரா (தெலுங்கு). இவற்றிலிருந்து தொந்தமும் சொந்தமும் திராவிட மூலமுடையன எனத் தோன்றுகின்றன. தொற்றுதல், தொத்துதல், தொந்துதல் என வருவன இயைபுடைய சொற்களாகப் படுகின்றன. எங்ஙனமாயினும் சுற்றுச்சூழல் மாசுபடாமலிருந்தால், மனித வாழ்வுக்குத் தொந்துரவு இல்லை. தமிழ் மொழிக்குச் சுற்றுச்சூழல் மாசு படர்ந்துளது. இத் தொந்துரவைக் களைந்தாக வேண்டும். தொந்துரவைத் தொந்தரவு என்றாலும் தொந்தரை ஏதுமில்லை.

68. கறையான்

இதைக் கரையான் எனச் சிலர் எழுதிவிடுவது தவறு. கறை - அழுக்கு, களங்கம், குறைபாடு. பழங்காலத் தமிழ் ஏடுகளைக் கறையான் அரித்ததால் நாம் இழந்தவை பல. இதைச் 'செல்'லரித்துவிட்டது என்பதுண்டு. சிதல், செல் என்பன கறையானைக் குறிக்கும் பழஞ்சொற்கள். ஈரம் பட்டுப் புழுங்காது மூலையில் கிடந்தவற்றையும் மண்தரையில் கவனியாது போட்டவற்றையும் கறையான் அரித்துவிடும். பதிற்றுப் பத்து முதற்பத்தும் இறுதிப்பத்தும் மட்டும் கிடைக்க வில்லை. கறையான் மேலிருந்தும் கீழிருந்தும் அரித்துக்கொண்டே வரும். இதற்கு இந்நூலே ஒரு சான்று.

கறையான் பனை ஏடுகளை விருப்பமுடன் தின்றுள்ளது. கடல்கொண்டது பாதி; கறையான் தின்றது மீதி. இவை போக, கயமைக் குணமுடையார் சிலர் ஆடி பதினெட்டம் நாள் வெள்ளப்பெருக்கிலும் சொக்கப்பனை என்று நெருப்பிலும் போட்டால் 'புண்ணியம்' என்று, புராணக் கதை சொல்ல, அதைக் கேட்ட மூக்கறையனான தமிழன் மிச்சம் மீதமிருந்த ஏடுகளையும் தொலைத்து, இன்று பிறர் தமிழில் எதுவுமே இல்லை என எள்ளி நகையாடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளான். கறையான் தமிழுக்கு நீங்காத கறையை ஏற்படுத்திவிட்டது.

69. மயிலம்மாள்

தினமணியில் 'உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்' என, அறிஞர் ஐராவதம் மகாதேவன் ஆசிரியராக இருந்தபோது, வாரந்தோறும் எழுதவைத்து

என்னை மீண்டும் ஒருமுறை தமிழுடன் பழகவைத்தார். அப்போது ஒரு நண்பர் 'மயிலம்மாள் என்பதை மைலம்மாள் என எழுதலாமா?'' என்று எழுதிக் கேட்டிருந்தார்.

மயிலம்மாளை மைலம்மாள் என எழுதுவது தவறு.

கைலாசம் எனும் வடசொல்லைக் (கைலாஸ்) கயிலாசம், கயிலாயம் என்பதே முறையாகும். இளையாத்தக் குடி இறைவன் பெயர் 'கயிலாயநாதர்' என்பதேயாம். கைலை என்பதற்கும் கயிலை என்பதற்கும் வேறுபாடுண்டு. திருமலைச் சிறப்பைப் பாடவந்த சேக்கிழார், 'கயிலைத் திருமாமலை' என்றுதான் குறிப்பிட்டுள்ளார். 'கைலை' என்பதே கயிலை எனப் போலியாக வருமாயினும் கயிலை என்னும்போது ஒரு தெளிவு உளது.

மயிலாப்பூரை மைலாப்பூர் என்பதும் பிழை. மயிலை எனச் சுருக்கியும் அழைப்பதைக் காண்க.

70. அவ்வையும் அய்யரும்

ஐ - அய் என்பதும் ஔ - அவ் எனப்படுவதும் எழுத்துப்போலி எனப்படும். சொல்லின் முதலில் வரும்போது அய்யரும், அவ்வையும் ஏற்கப்படும். ஔவை, அவ்வை எனவும் ஐயர், அய்யர் எனவும் இருவிதமாகவும் எழுதலாம் என்பதே கருத்து.

இதற்காக ஐ, ஔ இரண்டெழுத்தும் வேண்டாம் என்றும் உயிரெழுத்துப் பத்தாகிக் குறைவதால், சிக்கனமாகிவிடும் என்றும் ஓர் அன்பர் எழுதியிருந்தார்.

''ஐ, ஔ இரண்டையும் தவிர்த்து அவற்றை அய், அவ் எனக் குறிப்பிடுவதன் மூலம் தமிழ் உயிர்களின் எண்ணிக்கையைப் பன்னிரண்டிலிருந்து பத்தாகக் குறைக்க வாய்ப்புளது'' என 31-8-1988 தினமணியில் வாசகர் கருத்துக்களில் ஒரு நண்பர் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறு தமிழின் 'உயிரைக்' குறைக்கலாம் என்பது மொழியியல் அறிஞர் சிலரது கருத்துமாகும்.

அகர இகரம் ஐகாரமாகும், அகர உகரம் ஔகாரமாகும் என்ற தொல்காப்பிய நூற்பாக்களை (54, 55) வைத்துக்கொண்டு, இவை வடமொழிச் 'சந்தியக்கர' எழுத்துக்களைப் பின்பற்றியவை என விவாதித்த மேதாவிகளும் சிலர்.

இவை எழுத்துப் போலி பற்றி வந்தவை. தொல்காப்பியர் 'போலி'யாக வழங்கும் எழுத்துக்கள் பற்றி, நிரல்படக் கூறிவருமிடத்தில் இவை உள.

வ.சுப.மாணிக்கனார் தமது மாணிக்கவுரையில் ஐகாரம் தனிப் பொருளுடைய எழுத்து (ஒலியன்) என்பார். வேறு இரண்டு எழுத்து வடிவங்கள் ஐ ஒத்து ஒலிப்பதுண்டு. மைந்தன் - மயிந்தன். கைலை - கயிலை. வைரம் - வயிரம். அதுபோலவே 'ஔ'வும் தனி ஒலியன். அகரமும் உகரமும் சேர்த்து எழுதினால் ஔ போல ஒலிக்கும். பௌத்தம் - பவுத்தம். கௌந்தி - கவுந்தி. கௌதமனார் - கவுதமனார்.

ஐ, ஔ - வை நீக்கிவிடலாம் என்பது மிகமிகத் தவறான கருத்து.

தடய்யம் }	மடய்யன்	} இடையில் 'ஐ' வரும்போது,
தடயம்	மடயன்	அடிச்சொல் தடுமாறும்.

முன்னது 'தடை' அடிச்சொல்; பின்னது தடம் அடிச்சொல்.

முன்னது மடை - தொழில் பற்றியது. பின்னது மடம் - அறிவின்மை பற்றியது. இவை ஓசை, ஒலியளவு, பொருண்மையில் நுட்பமான வேறுபாடுடையன. மொழியிடையிலும் இறுதியிலும் வரும் 'ஐ'கள் தடுமாறும். ஔகார உயிர்மெய்களில் ஓரெழுத்துச் சொற்கள் பலவுள (கௌ, வௌ).

ஆங்கிலத்தில் ஒலிப்பில்லா எழுத்துள்ள சொற்கள் மிகப் பல. அங்கெல்லாம் அந்த எழுத்துக்களை விட்டுவிட்டு எழுதவில்லை. Attention, Tension - எப்படிப் பொருந்தும்? tion - sion - ஒரே ஒலிப்பாகலாமா? இங்குள்ளவர்களை விடச் சிறந்த அறிஞர்கள் அங்கும் உளர். மரபு மொழிக்கு உயிர் என்பது அவர்கட்குத் தெரியும்.

71. அம்மை, அம்மா, அம்மாள்

'அம்மையே அப்பா' என்பார் மாணிக்கவாசகர். 'அப்பன் நீ அம்மை நீ' என்பார் நாவுக்கரசர். அன்னை, ஆத்தாள் என்றும் அழைப்பதுண்டு. தமப்பனார் என்பது ஒரு வட்டார வழக்கு. அதுவே தகப்பன் எனத் திரிந்தது.

தேனம்மை வள்ளியம்மை என்றும் தேனப்பன் மெய்யப்பன் என்றும் இறைவி இறைவனைக் குறிக்க அம்மையும் அப்பனும் பயன்படுமிடம் மிகப்பல. கண்ணம்மா, கண்ணாத்தாள் என்று இணைக்கப்படு மிடங்களும் பலவுள.

அக்கை அக்கா அக்காள் என மூன்று விதமாகவும் வழங்குகிறது. அக்கச்சி, தங்கச்சி என்ற வழக்குகளும் உண்டு.

தாயை முன்பு 'ஆய்' என வழங்கினர். இன்று சிற்றூர் மக்கள் 'ஆயி' என அழைப்பர். தாயி, பாயி என 'இ'கரம் யகரத்துடன் சேர்ந்து வழங்கப்படும் முறை தொல்காப்பியர்காலந்தொட்டு, இன்றுவரைவழங்குகிறது.

இன்று அங்கிள், ஆண்டி, மம்மி, டாடி எனக் கதை எழுதுவோர், படம்பிடித்துப் பரப்புவோர் நச்சுக்காற்றைப் பரப்பி வருகின்றனர். 'அப்பனும் அம்மையுமாய், அன்புடைய மாமனும் மாமியுமாய்' இருக்கிற இறைவன் இவர்களைக் குடியுடன் ஒரு சேர அழிய யாது செய்வானோ, யாமறியோம்.

72. முன்னெழுத்து

தந்தையின் பெயரை முழுமையாய்ப் போடுவதும் ஊர்ப் பெயரோடு சேர்த்துத் தம் பெயரை வழங்குவதும் சங்க காலமரபு. மிகப் பழங்காலந்தொட்டு வரும் தமிழ் மரபு.

ராமசாமி என்பது தமிழன்று. இராமசாமி என்பதே தமிழ் வடிவம். இராம.பெரியகருப்பன், இராம. அழகப்பன் என்றே முன்னெழுத்தைப் போடவேண்டும். 'வாகை சூடிய சிலைஇ ராமன் தோள்வலி கூறுவோர்க்கே' என்பார் கம்பர். இராமன் என்பதை ராமனாக்கவோ ராம் ஆக்கவோ அவர் இசையார். கம்பருக்கு விழா எடுப்பதாக, ஆண்டுதோறும் ஆரவாரம் செய்யும் யாரும் கம்பரின் தமிழுணர்வை,

தமிழ்மரபை, தமிழறிவைப் படித்துணர்வதுமில்லை; பரப்புவதுமில்லை. வெறுமனே கதையை வைத்துக் கொண்டு நயங் காண்பதே இவர்கள் மனப்போக்காகும்.

முன்னெழுத்துக்களைத் தமிழில் போடுவதே மரபு. ஆர்எம், எம்எம், எஸ் - என்று முன்னெழுத்துக்களைப் போடும் பழக்கம் ஒரு நோய் போலப் பரவிக் கிடக்கிறது. சங்க காலத்தில் 'சேந்தன் குமரன்' என்றால் சேந்தன் மகன் குமரன்' என்பதாகும். 'கண்ணன் கூத்தன்' என்பது கண்ணன் மகன் கூத்தன் எனப் பொருள்படும். நகரத்தார் மரபில் மொய்ப்பணம் எழுதும்போது, முருகப்ப (செட்டி) சாத்தப்பன், நல்லப்ப (செட்டி) பழனியப்பன், அண்ணாமலை (செட்டி) முத்தையா - இவ்வாறு தந்தை பெயரை முழுமையாய் எழுதுவர். உறையூர் முடமோசியார், ஆலூர் மூலங்கிழார், ஆலத்தூர் கிழார் என இவ்வாறு ஊர்ப்பெயரை முன்னே போடுவது முன்பு பெருவழக்கு. இன்று இசைக் கலைஞர்கள் அரியக்குடி இராமானுச அய்யங்கார், குன்னக்குடி வைத்தியநாதன் என இவ்வாறு வழங்கும் மரபு, பழந்தமிழ் மரபை ஒட்டியதாகும். தமிழைத் துக்கடாவாகப் பாடித் தமிழரைத் துக்கத்திற்காளாக்கும் இசைக் கலைஞர் பலர், இவ்வாறு தமிழ் மரபுப்படி அழைக்கப்படுவது வியப்பேயாகும்.

73. உழுந்து

உழுந்தை உழுந்து என்றே போடவேண்டும். அதை உளுந்து என ஒலிப்பதும் எழுதுவதும் தவறு. உழுந்தங் களி மிகுந்த சுவையுடையது. 'உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை' (86) என்பது அகநானூறு.

'ஆடிக்கூழ்' என்று இதை வழங்குவது, நகரத்தார் வட்டார வழக்கு.

'உழுந்து உடை கழுந்தின்' (384) என்பது குறுந்தொகை. தடியை வைத்து அடித்து, உழுந்தைப் பிரித்தெடுத்துள்ளனர். 'நெய்யொடு மயக்கிய உழுந்து நூற்றன்ன' (211) என்பது ஐங்குறுநூறு. முறுக்கு, தேன்குழல் போல்வன உழுந்த மாவை நெய்யில் (எண்ணெய்யில்) பிசைந்து, நன்கு உருட்டி, நீளமாய்க் கொடிபோல் இழுத்து, வளையம் போல் செய்வர். வயலைக்கொடி படர்ந்து கிடப்பது, உழுந்த மாவை, நெய்யொடு கலந்து உருட்டி 'நூற்பது' போல் உளது. நூல் நூற்பதுபோல், அதைக் கைவிரல்களால் இழுத்துச்செய்வது இது. சங்கப்பாட்டு இன்றைய முறுக்கைப் பற்றிச் சொல்லும்போதே சுவையாக இருக்கிறது. உழுந்த வடையும் உலகப் புகழ் பெற்றுளது. இதனை அறியாததால், இதற்கு விளக்கமான உரையெழுத உரையாசிரியர்களால் இயலவில்லை. உழுந்து உடம்புக்கு வலுத்தருவது. அதை மாற்றி எழுதி, மெலியவைக்க வேண்டாம்.

74. பொய்சொல்லான்

தமிழனை அடையாளங் காட்டுவன, அவனுடைய தனித்தன்மையுள்ள பெயர்களாகும். 'ரங்கராசன் (Rangarajan) என்று ஆங்கிலத்தில் பெயரைப் பார்த்தாலும் அவர் தமிழ்நாட்டுக்காரர் என்பது விளங்கிவிடும். இன்று 'ரங்கராஜ்', 'ராஜ்' 'ரங்' என்று முடிந்தவரை சுருக்கிச் சுருக்குப் போட்டு விடுகிறார்கள். நம் இறைவன் இறைவியர்க்குரிய அழகிய திருப்பெயர்களையெல்லாம்

தொகுத்துத் தனி நூலாக வெளியிட வேண்டும். இவற்றை வடமொழிமயமாக்கி, ஒன்றும் விளங்காமற் செய்பவர்கள் விளங்காமல் போக, தமிழுக்கு ஆக்கமானவற்றை நாம் தேடவேண்டும். அறிவு ஆணவத்தால் மிக்கவை செய்பவர்களை நாம் நம் தகுதியால் வெல்லவேண்டும். தகுதியை, ஆக்கத்தை வளர்க்க வளர்க்கவே அக் கீழ்நோக்கிய சிந்தனையுடையவர்கள் தாமே திருந்துவர்.

பொய்சொல்லான் என்பது சிற்றூர் மக்களிடையே பரவலாக வழங்கும் ஒரு பெயர். அதனை இன்று 'பொசலான்' எனப் பேச்சில் திரித்துவிட்டனர். பொய்யாமொழி, பொய்யிலி, மெய்யன் - இவ்வாறு எத்தனை எத்தனையோ பெயர்கள் உள. திருப்பூந் துருத்தியில் 'பொய்யிலியப்பன்' உள்ளார். இப்பெயரைச் சத்திய வாகீசர் ஆக்கிவிட்டனர். ஒப்பிலியப்பனை உப்பிலி யாக்கி, உப்பில்லாத சோறு படைத்து, புராணம் எழுதி நம் மொழிச் செல்வத்தையும் சேர்த்துக் கொள்ளை கொள்வோரும் உளர்.

'திருடருண்டு, விழிப்போடிருங்கள்' என்றால் தவறா, எனக் கேட்பார், பாவேந்தர் பாரதிதாசன். இனியேனும் தமிழர்கள் விழிப்படைந்தால் மட்டுமே, ''தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவர்கட்கு ஓர் அடையாளமும் சிறப்பும் உண்டு'' என்று பாடுதல் இயலும்.

மழலையர் முதல் ஐந்தாம் வகுப்பு முடிய அனைத்துப் பள்ளிகளிலும் தமிழே பாடமொழியும் பயிற்றுமொழியும் ஆகச் சட்டத்தின் மூலம் கட்டாயப்படுத்தப்பட வேண்டும்.

மருத்துவம், பொறியியல், அறிவியல் உட்பட உயர்கல்வி அனைத்தும் தமிழிலும் தரவேண்டும். தமிழ்வழி உயர்கல்விக்குத் தனிப்பல்கலைக் கழகம் தொடங்க வேண்டும்.

தமிழே முழுமையான ஆட்சிமொழியாக வேண்டும். தமிழ் கற்றவர்க்கும் தமிழ் வழி கற்றவர்க்கும் தமிழகத்தில் வேலை வாய்ப்பும் ஊதிய உயர்வும் பதவியுயர்வும் தரவேண்டும்.

தமிழர் கட்டிய திருக்கோயில்களிலும் தமிழர் சடங்குகளிலும் இசையரங்குகளிலும் தமிழே பயன்பாட்டு மொழியாக வேண்டும்.

நடுவணரசு தமிழைச் செவ்வியல் மொழி என அறிவித்து, அதன் வளர்ச்சிக்கு உதவ வேண்டும். தேசிய மொழிகளில் ஒன்றாகிய தொன்மைமிக்க தமிழைப் பாராளுமன்ற நடைமுறை மொழியாக ஏற்கவேண்டும். திருக்குறள் இந்தியத் தேசியநூலாக அறிவிக்கப்பட வேண்டும். தாய்த்தமிழ்ப் பள்ளிகள் தழைக்க வேண்டும். உலகத் தமிழினம் ஒன்றுபட வேண்டும்.

தமிழண்ணல்

தமிழ்அடிசூடி